


# புன்னகை

C.N. அண்ணாதுரை

# புன்னகை

பேரறிஞர் அண்ணா எம்.ஏ.,
(தமிழக முதலமைச்சர்)

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

அன்பு நிலையம்
131 பிராட்வே சென்னை-1

முதற் பதிப்பு — 1959
இரண்டாம் பதிப்பு—1967

11568

விலை ரூ. 1-50

ராயன் அச்சகம், சென்னை-1

# வாழ்வில் விழா

தாலி என்பதற்கு, வைதீகர்கள் எவ்வளவு மகத்துவம் கற்பிக்கின்றார்கள் - கற்பிப்பதோடு மட்டுமா, அதற்காக அவர்கள் செய்யும் வாதம்.........நமக்கே பரிதாபமாயிருக்கும் ! நங்கை ஒருத்திக்குத் தாலி கட்டி விட்டதாலேயே ஒருவன் கணவனாக உரிமை கொண்டாட முடியுமா ? முடிகிறதா ?

இடுப்பில் குடத்துடன், முகத்தில் களையுடன் குடத்தில் நீர் ததும்ப, முகத்தில் எழில் ததும்ப நடந்து சென்றாள் கண்ணம்மா ! பாதை யோரத்திலே நின்று கண்ணம்மாவின் அன்ன நடையையும், துள்ளும் அழகையும் தினந்தோறும் கவனித்து வந்தான் குப்பன் !

கழுத்திலே கயிறு ஏறிவிட்டால், அவள் அவனுக்கு மனைவி தானே என்று கிழடுகள் பேசுமே அதை அடிக்கடி அவன் கேட்டிருக்கிறான். வழக்கம்போல ஒரு நாள் கண்ணம்மா இடுப்பில் குடத்தையேந்தி குளத்தங்கரைக்குச் சென்றாள். பாதையோரத்தில் நின்றுகொண்டிருந்த குப்பனுக்கு அவள் தண்ணீர்கொண்டு திரும்பும்வரைகூட தாள முடியவில்லை. எதிரே சென்றான், எடுத்தான் ஒரு தாலி ! கன்னி கண்ணம்மாவின் கழுத்திலே கட்டிவிட்டான். களிப்போடு கூவினான் கண்ணம்மாளுக்குத் தாலி கட்டி விட்டேன் என்று !

தண்ணீர் கொண்டுவர வந்த இடத்தில் தாலி கட்டப் பட்டது கண்ட கண்ணம்மா கதறியழுது வீட்டில் கூறி நீதி மன்றம் ஏறிவிட்டது இந்த நிகழ்ச்சி வழக்கு உருவில்.

நீதிபதி வழக்கை விசாரித்தார்; ஆர அமர யோசித் தார். ":தாலி கட்டிவிட்டதாலேயே அது கலியாணமாகக் கருதி விட முடியாது" என்பதுதான் அத்தீர்ப்பு. அது போன்ற விசித்திர வழக்கு ஒன்று நம் மாநிலத்திலேயும் நடைபெற்றிருக்கிறது !

கொல்லை மேடாக இருப்பினும், குளத்தங்கரையாக இருப்பினும், கிணற்றுப் பக்கமாக இருப்பினும் தாலி கழுத் திலே ஏறிவிட்டால் திருமணம் முடிந்து விட்டது என்று கருதியே குப்பன் இவ்வாறு செய்தான்! எப்படி இருக் கிறது மனிதனின் சுபாவம் ! ஆனால் நீதிமன்றமோ அதற்கு நேர்மாறான தீர்ப்பை அளித்திருக்கிறது.

"புலி நகம், புலிப் பற்கள் கயிற்றிலே கோர்க்கப்பட் டிருக்கிறதே அதன் தத்துவம் என்ன தெரியுமோ என்று கேட்டுவிட்டு, ஒரு கனைப்புக் கனைத்துவிட்டுப் பெரியவர் கள் கூறுவார்கள், அந்தக்காலத்திலே ஆண்மகன் தன் வீரத்தை விளக்க, காடு சென்று; வேட்டையாடி, புலியைக் கொன்று அதன் நகத்தையும் பற்களையும் தலைவிக்குக் காட்டி தன் வீரத்தைக் கூற. இத்தகைய வீரனையே நான் மணம் செய்து கொள்வேன் என்று அந்த மங்கை கூறு வாள். மணவினை நடைபெறும். இதனை எடுத்துக் காட்டு வதே தாலியிலே பொன்னால் இந்த அடையாள வஸ்துக் கள் கோர்க்கப்பட்டிருப்பதன் கருத்து" என்று கூறுவர்.

இது எவ்வளவு வேடிக்கை பாருங்கள். கலியாணம் நடக்க வேண்டுமென்றால், காடு சென்று புலிவேட்டையாடி, அதனைக் கொன்றுவிட்டு வரவேண்டும் என்பது முறையாக இருந்தால், நம்மில் எத்தனை பேருக்குக் கல்யாணம் ஆகியிருக்க முடியும்! காடு இப்போது சர்க்காரின் ரிசர்வ் ஆகி விட்டது. லைசென்சு பெற்று உள்ளே நாம் போனாலும் புலியைக் காணமாட்டோம். கிலியே கொள்வோம். திருமணம் நடந்தாக வேண்டுமே என்பதற்காக கிலி வலி பொறுத்துக் கொண்டுபோய் புலியைக் கொன்று அதன் நகத்தை நங்கையிடம் கொண்டுவந்து காட்டுவதாகவே வைத்துக் கொள்வோம். அதனைக் கண்டதும், அந்தப் பெண்ணின் மனதிலே என்ன தோன்றும் என்று எண்ணுகிறீர்கள்.

" அடடா! இந்த ஆள் புலியை அடித்துக் கொன்றுவிட்டானே ; இத்தகைய முரடனிடம் நாம் சிக்கிக்கொண்டால், நம்மை என்ன பாடுபடுத்துவானோ ; என்று நடுங்குவாளே தவிர, "நாயகா உன் வீரமே வீரம், வெறும் புலி நகம் எடுத்து வந்தீரே, மறுபடியும் காட்டுக்குப்போய் இரண்டு புலிக்குட்டிகளைக் கொண்டு வாரும் " என்று கூறுவாள் ? புலியைக் கொன்றவன் என்றதும் பூவைக்கு கிலிதான் பிறக்கும். திருமணம் நறுமணமாக இருக்க வேண்டுமானால் சம்மந்தம் சம்பந்தத்தை ஏற்படுத்த வேண்டுமே தவிர இத்தகைய கருத்துக்களா ஏற்படுத்த முடியும் ? ஏதோ அந்தக் காலத்திலே ஏற்படுத்தி வைத்து விட்டார்கள் பல வழக்கம். அவற்றிலே அபாரமான பக்தி சிரத்தை செலுத்துபவர்கள் இப்படித்தான் பெண் சம்மதித்தாலும், மறுத்தாலும் தாலி கட்டியாகட்டும்; பிறகு எல்லாம் சரிப்படுத்திக் கொள்வோம் என்று கருதுகின்றனர்.

குளத்துக்குப் போய் வந்த வழியிலேயே தாலி கட்டிய வன் கருத்து, வைதீகத்தின் விளைவு! தற்காலச் சட்டம் ஒன்று குறுக்கே இருந்ததால் அது தடுக்கப்பட்டுவிட்டது. இல்லையானால் ஆகாயவாணி பூமாதேவி சாட்சியாக நான் தாலி கட்டிவிட்டேன் என்று அவன் கூறிவிடக்கூடும். வைதீகக் கூட்டம் "இஷ்ட மிருந்தோ இல்லையோ" தாலி கழுத்திலேயே ஏறிவிட்ட பிறகு, அவள் அவன் மனைவி யாகி விட்டாள் என்று தான் அர்த்தம். விதி அப்படி அவளைக் கூட்டுவித்தது என்று கூறுவர். வேண்டா வெறுப்புடன் வேதனையுடன் வாழ்க்கையை கண்ணம்மா நடத்தித்தான் தீரவேண்டி நேரிட்டிருக்கும்.

என் தோட்டம், என் வீடு என்று பெருமை பேசிக் கொள்ளும் உடைமை உணர்ச்சியையே பெரிதும் அடிப் படையாகக் கொண்டதாகத் திருமணமுறை அமைந்திருக் கிறதே யொழிய, அன்பின் வெற்றியாக அமையவில்லை. எனவே தான் கண்ணம்மாளுக்கு இது இஷ்டந் தானு என்பதுபற்றுக் கவலையின்றி தண்ணீர் எடுக்கச் சென்ற வளைத் தாலிகட்டினன் குப்பன்.

"அவன் என்னடா மகாப் பெரியமனுஷின்னு நான் போய் அவளைக் கேட்கவேணுமா, நீ அவனைக் கலியாணம் செய்து கொள்கிருயான்னு? அதெல்லாம் உங்க காலத்தி லேயே வைத்துக் கொள்ளுங்கடா!" என்று சீறிப் பேசும் "மனிதர்கள்" நூற்றுக்குத் தொண்ணூறு வீடுகளில் இருக்கிருர்களே! இந்த நிலையில் காதல் ஏது? "என் னமோ இருக்கிறேன்" என்ற இழுப்புப் பேச்சும், "ஆண் டவன் புண்ணியத்தாலே இரண்டு ஆம்பிளைப் பசங்களும்

ஒரு பொட்டை குட்டியுமிருக்கு" என்ற குடும்ப வளர்ச்சிப் பேச்சுத்தான் இருக்கமுடியும். கண்டேன் காதல் கொண்டேன் என்பவைகளை யெல்லாம் கதையிலே படித்துக் கொள்ள வேண்டியது தான் — வேறே வழி ?

வாழ்க்கையிலே நேரிடும் சிக்கல் காரணமாகச் சச்சரவு கணவன் மனைவிக்குள் ஏற்படுகிறதோ அது போது நடைபெறும் பேச்சைக் கேட்டிருக்கிறீர்களல்லவா? தலைமீது மோதிக் கொண்டே புருஷன், "எனக்கென்று அந்தப் பாவிகள் எங்கிருந்தோ தேடிப் பிடித்து வந்தார்களே இந்தச் சனியனை, என் தலைக்குத் தீம்பாக கட்டி வைத்தார்களோ" என்று கூறுவான்.

அவன் தேடியதாக, விரும்பி அடைந்ததாக, காதலித்துப் பெற்றதாகப் பேச்சு இராது. இருக்க முடியாது. பெண்ணுந்தான் புலம்புகிறாள். "இந்தப் பாவிக்கு வந்து வாழ்க்கைப் பட்டேன் ! எங்காவது கிணற்றிலோ குட்டையிலோ பிடித்துத் தள்ளிவிட்டிருக்கலாமே" என்று குமுறுவாள். அப்போது அந்தப் பெண்ணின் மனக் கண் முன் தன்னைக் கேட்கவந்த வேறு இடங்களெல்லாம் தோன்றும்.

இப்படிப்பட்ட குடும்பங்களில் வாழ்க்கையின் சுவையிருக்க முடியுமா? சுவையற்ற வாழ்க்கையிலேதான் நல்ல பலன் காண முடியுமா ? பண்டத்திலே உப்புச் சப்பேயில்லை, சுவையில்லை. மண்போல இருக்கிறது என்று சலித்துக் கொள்கிறோமே ! வீட்டுக் காப்பியிலே மணமில்லை. பால் அதிகம். விறுவிறுப்பும் இருப்பதில்லை என்று கூறி ஓட்டலைத் தேடுகிறோமே ! பண்டத்துக்கும் பானத்துக்குமே இந்த அளவு சலிப்புத் தட்டும்போது

வாழ்க்கைத்துணை வளமற்று வறட்சி மிகுந்து, வம்பு வல்லடி நிறைந்து வாழ்க்கைத்துணை தேடும் முக்கியமான காரியத்தைத் துவக்கத்திலேயே செம்மைப்படுத்திக் கொள்ளாமல் பிறகு, "தவறான வழி நாடாதே" என்று அபாய அறிவிப்புப் பலகைகளை தொங்கவிட்டு என்ன பலன் காண முடிந்தது ? பொது மாதரை கூடுவது தீமை, பாபம் கேடு என்று எவ்வளவோ அறவுரைகள், அறிவுரைகள் கூறியும் கண்ட பலன் என்ன ?

இன்பம் இல்லாத இல்லம், ஒரு இருண்ட வீடு. அதனால் இடரும் இன்னலும் அதிகரிக்கின்றன. இழிவும் பழியும் மலிந்து கிடக்கின்றன. தந்தி தளர்ந்த வீணையிலிருந்து இனிய நாதம் எங்ஙனம் கிளப்ப முடியும்? சிற்சில இடங்களில், குறிப்பாகச் செல்வர் இல்லங்களிலே காணப்படும் சீரும் சிறப்பும்கூட காகிதப் பூதான்—காண்பதற்கு மட்டுமே காட்சி. மணம் இல்லை அங்கும்.

அலங்கார யுவதிகளும் அழுதபடிதான் உள்ளனர். அவர்களது கண்ணீர் வெல்வெட்டுத் தலையாணியை நனைக்கும். ஏழைப் பெண்ணின் கண்ணீரோ கையையே நனைக்கும். கையே தலையாணியாக அமைவதால் !

எனவே எல்லா ஏறுமாறுகளையும், தொல்லைகளையும், சிக்கல்களையும் சிறிதளவு மறந்து சிரித்துப் பேசி மகிழும் திருநாளன்று வாழ்விலே உள்ள வளைவுகளை நிமிர்த்த ஓர் வழி தேடவேண்டும். இன்றுபோல் என்றுமிருக்க என்ன வழி ? நம்போல் அனைவரும் மகிழ்ந்து வாழ மார்க்கம் என்ன என்று எண்ண இந்நாள் உதவட்டும்; நம் சிந்தனைக்கு வழி காட்டட்டும்.

வாழ்க்கை முள்ளுள்ள ரோஜா; முள் தோலால் மூடப் பட்ட பலா, தோலைக் களைந்தெறிந்து பலாவுடன் பிணைந் துள்ள பசையையும் நீக்கி, சுற்றுத்தோலை அகற்றினால் மட்டுமே சுளை கிடைக்கும்; சுவை உண்டு. பெரும்பாலான வர்கள்—முள் தைத்து விடுகிறது. அதனை களைய நேரம். நினைப்பு. சக்தி அற்றவர்களாய் உள்ளே சுளை இருக்கிறது என்ற உண்மையும் மறந்து, வாழ்வாது மாயம், மண்ணு வது திண்ணம் என்று வேதாந்தம் பேசவும், நம்மால் என்ன ஆகும் என்று நரம்பொடிப்புத் தத்துவமாகி காலங் கடத்துகின்றனர்.

களிப்புடன் உள்ள இந்நாள் - வாழ்க்கையின் வெற்றிபெற்று வாழவேண்டும் என்ற திடமான எண்ணத்தில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளும் நன்னாளாக இருக்கட்டும். அதிலே மிக முக்கியமான பகுதி வாழ்க்கைத் துணை தேடிக்கொள்வதாகும்.

குளத்தருகே செல்லும் கண்ணம்மா அல்லது கிழவர் பார்த்துக் கூறும் கனகா, மிராசுத் தகப்பனின் கடைக் கோடி அல்லது பூ வைத்ததில் தெரிந்த பூவை என்பவர்க ளல்ல வாழ்க்கைத் துணையாகக் கூடியவர்கள். வாழ்க்கை யிலே நமக்குள்ள குறிக்கோள் என்ன? என்பதனை சிந்தித்து வாழ்க்கை அமைத்துக்கொள்ள நாம் தவறி விட்டோம். சரி கவலை வேண்டாம். நமது மக்கள் இன்புறு தற்கு இனியாகிலும் அந்த உரிமையை நாம் தாராளமாக வழங்கவேண்டும் என்ற புதிய உறுதியைக் கொள்ளல் வேண்டும். நமது மகனுக்கும், மகளுக்கும், அண்ணன்

தங்கைக்கும் நாம் இதனைத்தான் பரிசாகத் தரவேண்டும். புழுத்துப் போன பழைய சம்பிரதாயங்களைப் பேசி தாலி கட்டி விடுவதாலேயே வாழ்க்கை மலர்ந்து விடாது.

விழா ஏதோ ஓர் நாள் ! விசாரம் மற்ற நாட்களிலே என்ற நிலை ஒழிந்துபட வேண்டுமானால் அன்புடன் நீவிர் வாங்கித்தந்த ஆடை போதாது, அகமகிழ்ந்து பூட்டிய ஆபரணம் போதாது, மனையையும் மாட்டையும் காட்டி மகிழ்வது போதாது. அவரவர்க்கும் தத்தம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் உரிமையை விழாப் பரிசாகத் தாருங்கள். அப்போதுதான் வாழ்க்கை ஓர் விழாவாக முடியும்.

# புன்னகை

தோழன் :

சித்தார்த்தரே ! சிந்தை நொந்தவர்போல நீர் இருப்பானேன் ? உமக்கென்ன குறை ? நீரோ கீர்த்திவாய்ந்த மன்னரின் மகன். சாம்ராஜ்ய சித்திரம், உமக்கு மனோரம்மியமான மாளிகை இருக்கிறது ; சிங்காரத் தோட்டமிருக்கிறது. அதோ பாரீர், நீலப் பட்டாடை அணிந்த மயிலாள் பச்சைக் கம்பளிமீது நடனமாடுகிருள். குயில் கூவுகிறது. மயிலின் சாயல், குயிலின் இனிய குரல், தென்றல்போன்ற குணம் கொண்ட தர்ம பத்தினியும், செல்வக் குழந்தையும் உமக்கு உள்ளனர். இவ்வளவும் இருக்க நீர் ஏன் முக வாட்டத்துடன் இருக்கிறீர். சந்திரனுக்கு களங்கமுண்டு. உமக்கு அதுவுமில்லை ! ரோஜாவில் முள் உண்டு. உமது வாழ்க்கை முள்ளில்லாத ரோஜாவாயிற்றே. சுருதியுடன் சேர்ந்த சங்கீதம் போன்றுள்ள உமது வாழ்க்கையில், வசீகரம் இருக்கக் காரணமிருக்கிறதே தவிர விசாரத்துக்குக் காரணமில்லையே. அரண்மனை உம்மை அழைக்கிறது. மணிமுடி உமக்கு சித்தமாக இருக்கிறது. கொலுமண்டபத்தில் மந்திரி பிரதானிகள், இளவரசர் என்றையத்தினம் சிம்மாதனமேறுவார் என்று ஆவலோடு காத்துக்கொண்டிருக்கின்றனர். வாழ்க்கை உம்மிடம் கொஞ்சி விளையாடுகிறதே. வனிய அணையும் சுகத்தைப் பெற்றும், வாட்டம் உமக்கு ஏன் ?

சித்தார்த்தர் :

நண்பா ! என் சிந்தனையை கெடுத்துவிட்டாய். நீ விவரித்த வசீகரங்கள் என்னை வாத்சல்யத்துடன் வரவேற்கின்றன. குதூகலமூட்டப் பலருண்டு. ஆனால் சந்திரனைக் கருமேகம் பிடித்து மறைப்பதுபோல், என் வாழ்க்கை வசீகரத்தை ஒரு வாட்டம் வதைக்கிறது. சந்திரன், மேகத்தை மிரட்டி அடித்துவிட்டு, மினுக்கிக்கொண்டு வரக் கண்டிருக்கிறேன். ஆனால் நானோ, வாட்டத்தினிடமிருந்து விடுதலை பெறுவது முடியாத காரியம்.

தோழன் :

இளவரசே ! சோகத்தின் காரணமென்ன? மன்னிக்க வேண்டும். மதனனின் கணைகள்......

சித்தார்த்தர் :

சீச்சீ ! என் மனைவியின் அன்பெனும் கேடயத்தின் முன்பு, அக்கணைகள் கூர் மழுங்கிக் கீழே விழும். என்னை வதைப்பது அதுவல்ல.

தோழன் :

வேறு காரணம் யாதாக இருக்கும்?

சித்தார்த்தர் :

மல்லிகையும் மனோரஞ்சிதமும் தூவிதானிருக்கிறது பஞ்சணையின் மீது. தென்றல் வீசுகிறது. நிலவு நடன

மாடுகிறது! யாழ் ஒலிக்கிறது. ஆம்! இவ்வளவையும் நுகர்ந்து இன்பத்தில் ஈடுபட ஆவலோடு பஞ்சணைக்கருகில் சென்றால், மலரணைமீது மங்கை இல்லை. சீறும் நாகம் இருக்கிறது என்வாழ்க்கைப் பஞ்சணையில். சீறும்நாகத்தை நான் கண்டேன். கலக்கம் ஏற்படாதோ? கூறு.

தோழன் :

*சீறும் நாகம் எங்கே ?*

சித்தார்த்தர் :

எங்கேயா ? எங்கும் அதனைத்தான் காண்கிறேன். சுகம், போகம், ஆட்சி, அன்பு இவைகள் தவழும் வாழ்க்கைப் பஞ்சணையில் படுத்துக் கொண்டிருப்பது, வறுமை, மூப்பு, நோய், மரணம் என்னும் நாலு தலைகள் கொண்ட நாகம். அதனைக் கண்ட பிறகு எனக்கு வாழ்க்கைப் பஞ்சணையில் படுக்க மனமில்லை.

தோழன் :

இதைத்தான் கூறினீரா ? நன்று! நன்று! பால்போல் காயும் நிலவு சிலநாள் தேயும், இருளும் ஒளியும், இன்ப துன்பமும் இயற்கைதானே ? இதனை மாற்ற நாமா அதிகாரிகள் ? சுகம் கிடைக்கும்போது அதனை நுகருவது. துக்கம் நேரிடும் காலையில் சகித்துக்கொள்வது என்பதைத் தவிர வேறு வழி ஏது ?

சித்தார்த்தர் :

புதுவழி காண்பேன். போகங்களைத் துறந்து, அரசை விட்டு நீங்கி, அலைந்து திரிந்து, இன்பமும் துன்பமும்

பிணைந்துள்ள முடியை அவிழ்த்துவிடும் "வித்தை"யைக் கற்பேன். அந்தப்புரத்து அலங்காரியும் வேண்டாம். அரசபோக்மும் வேண்டாம். உண்மை உணரும் வேலையில் ஈடுபடுவேன். தவசிகளை அடுப்பேன். அவர் தம் கருத்துக்களைச் செவி மடுப்பேன். நாலுதலை நாகத்தை நசுக்குவேன்.

*　　　*　　　*

புத்தருக்கும் அவரது தோழருக்கும் மேலே தீட்டியுள்ளது போன்ற பேச்சு நடந்திருக்கக் கூடும். இளவரசர், துறவியாகும் முன்னம், தமது தோழருடன் கலந்து பேசியிருப்பார். இல்லையேனும், அவருடைய மனதிற்குள்ளாகவேனும் இத்தகைய கருத்துப்போர் நடைபெற்றுத்தான் இருக்கும். இறுதியில் சித்தார்த்தர் துறவு கோலம் பூண்டார்! புத்தரானார்.

கருணை ததும்பும் பார்வையால் அவர் கசடர்களின் கல்மனதையும் கரைத்தார். புன்சிரிப்பால், புரோகிதரின் பொற்சரிப்பைப் பொசுக்கினார். அன்பினால் ஆரியப் புரட்டல்களைக் புறமுதுகிட்டு ஓடச்செய்தார். கொலையை வேள்வி என்றும், குருட்டுத்தனத்தைச் சாத்திரமென்றும், ஆபாச ஆட்டங்களை ஆண்டவன் பணி என்றும் சாதிச் சனியனைக் கடவுள் கட்டளை என்றும் கூறி, மக்களைச் சிறைப்படுத்திய பார்ப்பனீயத்தைப் புத்தரின் புரட்சி மூலைக்கு விரட்டிவிட்டது. புத்த மார்க்கம், வஞ்சக வர்க்கத்தவரை வீழ்த்திற்று. ஆனால்......

இந்தியாவில் தோன்றிய புத்தமார்க்கம் இந்தியாவில் இல்லை! சீன நாட்டில் இருக்கிறது! புத்தரின் மறைவுக்குப்

பிறகு, புதருக்குள் மறைந்திருந்த ஆரிய அரவம் வெளிக் கிளம்பி, மீண்டும் தனது விஷப்பல்லுக்கு வேலைத் தேடிக் கொண்டது. புத்தமதம் இந்தியாவிலே இடம்பெற்று இருந்திருப்பின், நாட்டு நிலையும், மக்கள் நிலையும் இப்போது இருப்பதைப்போல இருந்திருக்கும் !

அன்று சுதேசமித்திரன் எழுதியது. பாரதத் தாய் ஈன்றெடுத்த புத்த பகவான் உபதேச மொழிகளே சீனர் பின்பற்றும் "மதம்" இன்று. கோபால கிருஷ்ணரின் பிருந்தாவன லீலைகளுக்கு மதிப்பைத்தரும் மித்திரனுக்கு இந்த வாசகத்தை எழுதும்போது துக்கமோ, வெட்கமோ ஏற்பட்டிருக்காது. பெருமையும் பூரிப்பும் உண்டாகி இருத்திருக்கும். புத்தரின் புரட்சி வேகத்தை நாடு கடத்தியவர்கள் நமது மூதாதையர்கள் என்ற எண்ணம், ஆரியருக்குப் பூரிப்பையையும் பெருமையையும் அளிக்கும். ஆனால், பார்ப்பனீயத்தால் பாழான நமக்கோ, படிக்கும்போது வெட்கமும் துக்கமும் பிறக்கிறது. ஆரியச் சேற்றில் ஓர் சீரிய செந்தாமரை பூத்தது! அது சீனச் சீமைக்கு சென்று விட்டது. பூத்த இடத்தில் மீண்டும் ஆரியச் சேறே இருக்கிறது. புத்த மார்க்கம் காட்டிய வழி செல்ல மறந்தோம்! வெட்கம்! துக்கம்!

புத்தர் தமது அரசைத் துறந்தவர் மட்டுமல்ல, அவரது மார்க்கமும் அவரைப் போலவே இந்தியாவை விட்டு வெளியேறி சீனம் சென்று விட்டது.

இன்று. "பாரதத்தாயின் பிள்ளையான புத்தர் தந்த பொன் மொழிகளைச் சீனர் போதனையாகக் கொண்டு வாழ்

கின்றனர்'' என்று கூறிய மித்திரன் அந்தப் பொன் மொழிகள் பிறந்த நாட்டிலே ஏன் நிராகரிக்கப்பட்டு விட்டன என்பதற்குக் காரணங் கூறுமா?

காசிக்கு அருகே, சாரநாத் என்ற இடம் இருக்கிறது. அழகிய பாட்டை! வழியில் பெரும் பகுதியில், ஒரு வேப்பமரம். அதன் பக்கத்திலே ஒரு மாமரம் என்று பாதை அமைந்திருக்கிறது. சித்தார்த்தர், உலகில் கசப்பும் இனிப்பும் ஒன்றை ஒன்று பின்னிக்கொண்டு நிற்பதைக் கண்டாரல்லவா? சாரநாத்தில் உள்ள புத்தர் கோட்டத் திற்குச் செல்லும் பாட்டையில், இதனை நமக்கு எடுத்துக் கூறுவதுபோல், வேம்பும் மாவும் ஒன்றன் பக்கத்தில் ஒன்ருக நின்று காட்சி தருகின்றன. கோட்டத்தை நெருங்குகையில், வேம்பு இல்லை; மாமரங்களே உள்ளன. சித்தார்த்தர் இன்பமும் துன்பமும் உள்ள வாழ்க்கைப் பாதையைக் கடந்து, அறிவு உதயம் பெற்றதும் துன்பம் துடைக்கப்பெற்று ஈடிலா இன்பம் பெற்ருர் என்று கூறு கிருர்களே அதைச் சித்தரிப்பதுபோல், புத்தர் கோட் டத்தை அணுகும்போது பாட்டையில் இனிய மாமரங்கள் மட்டுமே உள்ளன. புத்தர் கோட்டத்திலே, ஜப்பான் சர்க்கார் தானமாகத் தந்த ,'மணி'' தொங்குகிறது. கோட்டத்தை அடுத்தாற்போல் சீனச் செல்வர் ஒருவர் புத்தர் கோட்டமொன்று புதிதாக அமைத்துக் கொண்டு இருக்கிருர்! அங்கு புத்த விக்ரகம், சீன உருவத்துடன் காணப்படுகிறது. சாரநாத்தில் சார்ந்த புத்தர், போதனை பல புரிந்தார். ஆனுல், இன்று சாரநாத், பக்தகோடிகள் தேடிச் செல்லும் இடமாக இல்லை. அதை அடுத்துள்ள காசியே புண்ணிய க்ஷேத்திரமாக இருக்கிறது.

“பாரதத்தாய் ஈன்ருள் : பராமரிக்கவில்லை. நான் வேறு வீடு சென்றேன்” என்று சாரநாத்திலுள்ள புத்த உருவம் கூறுவதுபோல், அந்த அநீதியைக் கேட்ட ஆண்மையில்லையே உங்களுக்கு என்று கேலி செய்வது போல், புன்னகை புரியக்கண்டேன். “அரச குடும்பத்தினர் நீர் ! புத்தரானீர் ! உம்மையே பாடுபடுத்திற்றே பார்ப்ப னீயம் ! என்னை அது என்ன செய்யுமோ” என்று புத்த ரிடம் கூற எண்ணினேன். பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் என்னுடன் இருந்தார். நேரமாகிவிட்டதை உணர்ந்து தமது கைத்தடியைக் கீழே தட்டினுர். சிந்தனை யிலாழ்ந்திருந்த நான் விழித்துக் கொண்டேன். காற்று அடித்துக் கொண்டிருந்தது ! அந்த வெண்ணிறத் தாடி அசைந்து கொண்டிருந்தது ! மீண்டும் புத்தரை நோக்கி னேன். “உம்மைப் பார்ப்பனீயம் நாடு கடத்தி இருக்கிறது ஆனல், நீர் அன்று மூட்டிய புரட்சியை அடியோடு ஆரியம் ஒழித்து விடவில்லை. இதோ பாரீர், பார்ப்பனீயத் தின் வைரி !” என்று புத்தரிடம் பெரியாரைப்பற்றி நான் கூறவில்லை. என் மனதில் எண்ணிக் கொண்டேன். அதையும் அறிந்து “நன்று ! நீதி நின்று வெல்லும். ஆனல் நிச்சயம் வெல்லும்” என்று என்னை நோக்கி சாரநாத் புத்தர் கூறினது போன்றிருந்தது அந்தப் புன்னகை !

# வெற்றிவிழா

முப்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பொது மக்கட்கு- பரிதாபத்துக் குரியவர்கட்காகப் பேசித் தமிழரை தட்டி எழுப்பத் தவராது உழைத்து, தாடி முளைக்காத காலத்திலே துவக்கிய அந்த அரும்பணியைத் தாடி வெளுத்துக் காட்சி தரும் இன்றுவரை அயராமல் ஆற்றிவரும் அஞ்சா நெஞ்சினர்.

எங்கும் எதிர்ப்பு! எத்திக்கிலும் ஏசல்! மேடை ஏறினல் ஜோடிக்காலிகள் கூட்டத்துள் துரத்தி விடப் படும். துடுக்கர் கூட்டம்! கல்லடி! சொல்லடி! இவ்வள வுக்கும் இடையே நின்று எதிர்ப்புக்கண்டு அஞ்சாது, என் உரிமை என் மனதிற் பட்டதைக் கூறுவது என்று எக்காள மிட்டு வரும் ஒரு இணையில்லாத் தலைவர்.

ரிஷியானலும் என்ன, தவசியானலும் என்ன, வழி காட்டியானலென்ன, வைகுண்ட வாசியானலென்ன, வண்ட வாளங்களை வெளியிட்டே தீருவேன். வந்தது வரட்டும்; வறண்ட மதியினர் வந்தனம் செலுத்த மாட் டார்கள் என்பதற்காக, வஞ்சகரின் அடிபணிவதே? அதுவா வீரத் தொண்டாற்ற விழைபவரின் கடமை என்று சொல்லித் தியாகத் தீயிலே குதித்து தமிழருக்கு புது வாழ்வு தந்த தந்தை.

நாடுமுழுவதும், நான்கு ஜாதிகள் நான்முகன் கட்டளை என்று நம்பி, அதிலே திராவிட மக்களாம் நாம், நாலாம் ஜாதி பார்ப்பனருக்கு சேவை செய்யத் தோன்றியவர்

என்று எண்ணி ஏமாந்திருந்த நேரத்தில் "ஜாதி ஏதப்பா? அது எத்தர் செய்துவைத்த சூதப்பா! நான் சொல்லுவது தப்பா என்று யோசித்துப் பதில் கூறப்பா!" என்று முழக்கமிட்டு முழுக்கேற்றித் திராவிட முரசு ஒலித்திடச் செய்த ஒப்பற்ற தலைவர்.

எட்டுமுறை சிறை சென்ற தீரன். தமிழரின் தீரத்தைப் பாடி, ஆச்சாரியார் ஆட்சியை சாடி, அறுபதாம் ஆண்டிலே வெஞ்சிறைப் புகுந்த வெற்றி வீரன். வாலிபர் தோழன், வற்றாத பகுத்தறிவின் காவலன்.

இனத்தை அறியாது, அதன் இயல்பும் தெரியாது மதம் எது வென்று உணராது, ஆரிய மதத்தைக் கொண்டு மக்களை அடிமை கொண்டவிதம் தெரியாமல், நமது மக்கள் நினைப்பு கெட்டு நிம்மதியற்றுக் கிடந்த நேரத்தில், வெள்ளத்தை எதிர் நீச்சலால் கடந்து, வீரப்பணி புரிந்து, நம்மை நாம் உணரவும், நமது இனம் இதுவெனத் தெரியவும், அதன் விடுதலைக்குப் பாடுபடவும், அந்தப் போரிலே பிணமானாலும் சரி கவலையில்லை என்ற உறுதியை நாம் பெறவும் உழைத்த உத்தமன்.

மதக் குருமார்களும், மடத்து அதிபரும், கோயில் குருக்களும், வக்கீல் ஐயரும். ஆளும் வர்க்கமும் ஐஸ்வரியம் பெற்றோரும் அவரை எதித்தனர். ஆற்றல் அரண் அமைத்துக் கொண்டு, அறிவெனும் வாளேந்தி, உழைப்பெனும் புரவி ஏறி, தமிழகத்திலேஉலவி, ஆரியக்காட்டை அச்சம், தயை, தாட்சண்யமின்றி அழித்தொழிக்கும் பெரியார் தமக்கு எதிரிடையாக அமைக்கப்பட்ட எதிர்ப்பு முன்னணியைக் கண்டு, எஃகு உள்ளம் கொண்ட நமக்கு இந்த எதிர்ப்பு எம்மாத்திரம் என்று கூறி, களத்திலே

போரிட்டபடி, மாண்டாலும் மாள்வனேயன்றி, கனபாடிக ளின் காட்டுக் கூச்சலைக் கேட்டு, வீட்டுக்கோடி ஒளிய மாட்டேன் என்று மொழி புகன்று இனம் வாழ வழி அமைத்துத் தந்தார். அவர் காணுத களம் இல்லை! வெற்றி பெருத போரில்லை வீணரின் உரை அவரை விரட் டியதில்லை.

அவருக்கு இக்கிழமை 68-ம் ஆண்டு.

இந்தக் கிழமையை விழாவாகக் கொண்டாடும் தோழர்கள் பெரியாரின் பெருந் தொண்டனைப் பற்றிப் பேசிவிட்டுப் பெருமூச்செறிவர்—ஏன்? இலேசாக—தமது தோழர்கள் உள்ளத்திலேயேகூட ஒரு சந்தேகம்—கொஞ் சம் சஞ்சலம் உண்டு—அதாவது இந்த உழைப்பு தக்க தோர் வெற்றியைத் தந்துவிட்டதா, அல்லது சூதகரின் சூழ்ச்சியின் காரணமாக, உழைப்பு வீணுகிவிட்டதா என்ற எண்ணம்.

பத்திரிகைப் பாராட்டுதல், பாமாலை, பூமான்களின் பவுன் மாலை, சர்க்கார் தரும் பட்டம் பதவி மாலை ஆகி யவைகளை வெற்றிச் சின்னமெனக் கொள்வதாயின், பெரி யார் வெற்றிபெற்றவரல்ல. ஆனுல், வாலிப உள்ளங்க ளின், நன்றி கலந்த அபிஷேகமே வெற்றிக்கான சின்னம் எனில் பெரியார் பெரு வெற்றியை நெடுநாட்களுக்கு முன் னதாகவே பெற்றுவிட்டார் என்று திட்டமாகக் கூறலாம்.

சட்டசபைக்கு அழைத்துச் செல்லமாட்டார். பட்டம் வாங்கித் தரமாட்டார். பதவியில் நம்மை உட்கார வைக்க மாட்டார், பணம் காசு தரமாட்டார், ஒரு பாராட்டுரை கூட வழங்கமாட்டார் என்பதை அனுபவ பூர்வமாகத்

தெரிந்திருந்தும், ஆயிரமாயிரம் இளைஞர்கள் அவருக்குத் துணை நிற்பது வேறு எங்கும் காணமுடியாத அற்புதம்! பெரியாரின் பெரும் வெற்றி அது. வாலிபர்களைத் தன் பக்கம் இழுத்துவிடும் ஓர்வகை "அபின்" இருக்கிறது. அந்த குறுகுறுப்பான பார்வையிலே, கொச்சை மொழியிலே பச்சை பட்டவர்த்தனமாக இருப்பதைக் கூறிடும் பேச்சிலே இந்த "அபின்" எண்ணற்ற பத்திரிகைகளின் பிரசார பலத்தையும் விட மேலானது. எத்தனையோ வாலிபர்களை, வாழ்க்கைப் பூந்தோட்டத்திலிருந்து, போர்க் களத்துக்கு இழுத்து வந்துவிட்டது.

பிற கட்சியாளர்கள்' குறிக்கோள் மட்டும் கொண்டவர்களல்ல, நடைமுறைக்கான, அன்றாட வேலைத்திட்டமும் உடனடியாக நடத்தியாக வேண்டிய வேலைத் திட்டமும் உடையவர்கள், எனவே அவர்களுக்கு இலாப நஷ்டக் கணக்குப் பார்த்துக்கொள்ள அதற்கு ஏற்றபடி திட்டத்தைத் திருத்த மாற்ற, புதுப்பிக்க வசதி உண்டு. பெரியார் துவக்கி நடத்திவரும் கட்சிக்கு உடனடி வேலைத்திட்டம் என்று ஒன்றுமில்லை. உழைத்து மெருகேற்றி அந்த மெருகு ஏறினதன் பலனாக, பிறகு சமூகமே ஓர் புதிய பயனுள்ள தோற்றம் அளிக்கவேண்டும் ' இலாப நஷ்டக் கணக்கு' பார்க்க முடியாது, வசதி கிடையாது. கதிர் தோன்று முன்புவரை, புல்லுக்கும் நெல்லைத் தரப்போகும் பச்சைக்கும், பார்க்கும்போது வித்தியாசம் தெரியமுடியாதல்லவா? அதுபோல, கதிர் காணுமுன் கணக்குப் பார்க்க முடியாது, வெறும் பச்சை என்று எண்ணிடுவோர் ஏமாளிகள் — கதிர் முளைக்க வேண்டும்; அதற்காகப் பயிரைக் கசக்கிப் பார்க்கவேண்டும் என்று நினைப்பவர் கோமாளிகள், பெரியாரின் உழவு முறையை மட்டும் தெரிந்துகொண்டால் போதாது. வயலிலே இருப்பது ஆறு மாதப்

பயிரல்ல ஒரு 'தலைமுறைப் பயிர்'—பல தலைமுறைகளாகக் கறம்பாகிக் கிடந்த வயலிலே உள்ள பயிர். அறுவடைக்குக் காலம் பிடிக்கும்!

இடைக்கால சர்க்கார்—? நாம் சட்டசபை? இல்லை; தொடர்பு இல்லை, பத்திரிகை பலம்?—தத்துவம் குழவி நிலை' அமைப்பு, முடிச்சேறின கயிற்றின் நிலை. முறுக்கேறின கயிரல்ல, பிரசாரம், காட்டு வெள்ளத்தின் முறை. கொள்கைகளா?—வோட்டுப்போடும் விதமானவை.

நாம் இவைகளை மறக்கத் தேவையில்லை—சொல்வதிலே குற்றமும் இல்லை—கூச்சமும் வேண்டாம். ஏனெனில் சஞ்சலத்துக்கும் அப்பால், நாம் சந்தோஷப்படும் அளவுக்கு நமக்கு வெற்றி இருக்கிறது.

இவ்வளவு இடையூறுக்கிடையே நாம் பணியாற்ற முடிந்தது,

இடையூறுகள் ஒழிந்தால்? எண்ணும்போதே பெருமூச்சு புன்னகைக்கு இடந்தரும். எண்ணிப் பாருங்கள்;

நாம் மேற்கொண்ட வேலை, "ஆயிரங்காலத்துப் பயிர்" என்பார்களே அது போன்றது, எனவேதான். உடனடியாகக் கண்ணுக்குத் தெரியக்கூடிய, மற்றக் கட்சிக்காரர்கள் காட்டுவது போன்ற, 'அன்றாட வெற்றிகள்' நமக்கு இல்லை. ஆனால், நாம் அடைந்துள்ள வெற்றி, கறம்பைத் திருத்தி வயலாக்கி இருக்கிறோம்—ஆம்!—சூழ்நிலையை மாற்றி இருக்கிறோம், மனப்போக்கை மாற்றி இருக்கிறோம். 'எதிரிகள்' என்று தவருக எண்ணிக் கொண்டிருக்கும் பலர். நமது கொள்கைகளின் வக்கீல்கள்! நீமட்டுந் தானு? நான் என்ன ஆரிய அடிவருடியா?

உனக்குத்தானு? சீர்திருத்த ஆர்வம்? நாங்களென்ன குளத்தங்கரை குப்பன்களோ! உனக்குத்தானு சுயமரி யாதை வேண்டும்! நாங்கள் அதனை விரும்பாதவர் களோ? நீ மட்டுந்தானு வடநாட்டின் படை எடுப்பை தெரிந்து கொண்டவன்? நாங்கள் அறியமாட்டோமா?— இவைகள் காங்கிரஸ்—கம்யூனிஸ்டு வட்டாரங்களிலே இருந்து கிளம்பும் வார்த்தைகள். வார்த்தைகளை வீசிவிட் டுக் கூடவே இரண்டோர் கற்களையும், தீப்பந்தம், திராவ கம், கத்தி முதலியவற்றையும் கூடத்தான் வீசுகிருர்கள். ஆனுல், சூழ்நிலை மாறிவிட்டது. கொள்கைக்கு அவர்க ளும் ஒப்புக்கொண்டனர் என்பதைத்தானே இந்நிலை காட் டுகிறது. இது பெரியாரின் பெரும் வெற்றி. எனவே, நண்பர்கள் ஆயாசப்படவோ, ஏன் ஆயாசபடவேண்டும்? எல்லாம் சரி, ஆனுல் எங்கே பலன் என்று கேட்கவோ தேவையில்லை.

அதுவே பெரியார் வாரவிழாக் கொண்டாடும் அன் பர்களுக்கு நாம் தரும் செய்தி.

வெற்றி பெற்ருயிற்று. பெரியார் பெருந்தொண்டு பயன் தந்தாகிவிட்டது—என்று உறுதியுடன் கூறலாம், மகிழ்ச்சியுடன் சொல்லலாம். பெரியாருக்கு உளம்கனிந்த நன்றியை தெரிவிக்கலாம். தெரிவிப்பதுடன், "பெரி யாரே! தாங்கள் அரும் பெரும் உழைப்பினுல் உண்டாக்கி வைத்த சூழ்நிலையை நாங்கள் இனி பயன்படுத்துவோம். தங்களுக்கு மேலும் தொல்லை நிறைந்த வேலை தரமாட் டோம். இந்தச் சூழ்நிலையை ஏற்படுத்தத் தாங்கள் ஒரு வரால் மட்டுமே முடியும். உண்டாக்கினீர்கள். இனி நடக்கவேண்டிய காரியம். கிடைத்த சூழ்நிலை கெடாத

படி பாதுகாத்துக் கொள்வதுடன், அன்றாட வேலைகள் உடனடித் திட்டங்கள் ஆகியவற்றைச் செய்வது. அதனை நாங்கள், தாங்கள் மகிழும் வண்ணம் செய்து முடிப்போம்'' என்று உறுதி கூறி அவருக்கு மனதில்' வெற்றி கிட்டிவிட்டது! இனி வேலை நடக்கும்! அதற்கான அருமை மக்கள் உள்ளனர் என்ற மகிழ்ச்சியுடன் கலந்த நம்பிக்கை பிறக்குமாறு செய்திடுவதுதான் பெரியார் 'வார விழா' வின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டுமே தவிர, "விடுதலை" குறிப்பிட்டது போலவே, தோழர் அர்ஜுனன் அவர்களின் அறிக்கையைப் போலவே "நிதி" அல்ல முக்கியமானது. இன்னமும் நமது செவியில் ஒலித்தபடி இருக்கிறது. திருச்சியில் திரண்டுவந்த 40 ஆயிரம் மக்களுக்கு சந்தோஷத்தால் நர்த்தனமாடும் விதமாகப் பெரியார், "அப்படியும்" இப்படியுமாக, வீடு வாங்கியும் அதனையே இலாபத்திற்கு விற்றும், செட்டாகச் செலவு செய்தும், இப்படி எல்லாம் கொஞ்சம் பணம், ஒரு பத்து நாற்பத்து ஆயிரம் ரூபாய் சேர்த்துதான் வைத்திருக்கிறேன் யாருக்கு? கட்சிக்குத்தானே என்று கூறுனதும், அது கேட்டு மக்கள் ஆனந்த ஆரவாரம் செய்ததும், ஆகவே, கட்சிக்கு நிதி திரட்டிதான் ஆகவேண்டும். பெரியார் விழாவின் முக்கியவேலை அதுதான் என்று நிதியை முன்னணியில் நாம் நிறுத்தவில்லை. நாம் கூறுவது நாம் வெற்றி பெற்றிருக்கிறோம், வீணுக்கு உழைத்தோமில்லை, விசாரப்பட வேண்டியதில்லை, என்பதை விளக்கவேண்டும் என்பதுதான்.

அதுமட்டுமல்ல, நம் பெரியாரின் பெருந்தொண்டின் பலனைப் பெற்று' சூழ்நிலையை மாற்றிக் கொண்டோம். இனி சூழ்நிலையை மாற்றும் வேலை மட்டுமல்ல நமக்கு

வேறோர் 'கட்டம்' ஆரம்பமாகிறது நமது இயக்கத்துக்கு என்பதை அறியவேண்டும்.

சுரங்கத்திலிருந்து, சிரமப்பட்டு தங்கத்தைத் தோண்டி எடுத்தாகிவிட்டது. பெரியாரின் பெருவெற்றி இது. எடுத்துப் பார்க்கும்போது "பாறை" போலத் தான் தோன்றும். அடுத்தக் கட்டம், வெட்டி எடுக்கப் பட்ட பாறை உருவில் உள்ளதை. 'ரசாயன' 'விஞ்ஞான' முறைப்படி உடைத்து, பிரித்து, துடைத்துத் "தங்கம்" என்று சகலரும் தெரியும்படிச் செய்வதுடன், அதனுல் பய னுள்ள பணிகள் செய்து காட்டவேண்டும். சுரங்கத்தி லிருந்து பொன்னை வெட்டி எடுத்துவரும் காரியம் ஆபத் தானது. சிரமமானது. அதற்கு அலாதியான திறம், முறை வேண்டும். கருவிகளும் அதற்குத் தனி. பெரி யாரிடம் இவைகளுக்கானத் திறம் ஏராளம். எனவே அவ ரால் முடிந்தது. நமது நன்றி அதற்காக.

ஆனுல், வெட்டி எடுத்துக்கொண்டு வந்த 'தங்கத்தை பதம் செய்ய, பக்குவம் செய்ய, முறை செய்ய, கருவி வேறு. செய்யவேண்டிய பொறுப்பையும் பெரியாரிடமே தருவது நமது கையாலாகாத் தனத்தைக் காட்டிக்கொள் வதாகும். மீண்டும் மீண்டும், மேலும் மேலும் சுரங்கம் தோண்டும் வேலையையே செய்யும்படி பெரியாரைத் தூண்டிக் கொண்டிருப்பதும் நன்றிகெட்டச் செயலாகும்.

எனவே, 'விஞ்ஞான ரசாயன' முறைப்படி, பாறை உருவிலுள்ள பொன்னைப் பதமாக்கும் பணியை மற்ற வர்கள் மேற்கொள்ள வேண்டும். மேற்கொள்ளும்போது, சுரங்க வேலைக்காக பெரியார் கையாண்ட அதே முறை களும் கருவிகளும் இருக்கவேண்டு மென்று எண்ணுவது கிடைத்த பொற்கட்டியைக் கெடுக்கும் விதமாக முடியும்?

முறையும் கருவியும் வேறுதான் இதற்கு. இதனை உணர்ந்து புதுப் பணியினை மேற்கொள்ளுவோம். நீர் கவலையற்று களிப்பதுடன், நம்பிக்கையுடன் எங்கள் வேலையைக் கவனித்துக்கொண்டு, தட்டிக்கொடுத்துக் கொண்டு, பெருமையுடன் எங்களை பார்த்துக்கொண்டு இருங்கள் என்று: இந்த விழாவன்று நாம் பெரியாருக்குக் கூறவேண்டும். அதுவே அவருக்கு நாம் காட்டவேண்டிய மரியாதை முறையாகுமே யொழிய, மேலும் மேலும் போராட்டம் வருகிறது—பெரியார் நம்மை நடத்திச்செல்வார்—என்று இன்னும் கூறி, அவருக்கு நாம் இந்த வயதிலும், சுரங்க வேலையும், சூருவளியில் உழலும் வேலையும் தந்து, மேலும் அவருடைய உழைப்பை உறுஞ்சும் காரியத்தில் இறங்குவதாக இருக்கக்கூடாது,

ஒரு பெரிய இயக்கம், பல பத்திரிகைகளின் துணையுடன் கட்டுக்கோப்புள்ள விதமாக உள்ள அமைப்பின் பக்க பலத்துடன், சாதிக்கக் கூடியதைவிட மேலான, மகத்தான, வெற்றியை சூழ்நிலையை மாற்றி அமைக்கும் அடிப்படைக் காரியத்தைப் பெரியார் ராமசாமி தனது 30-ஆண்டுத் தொண்டினால். பெற்றார்—நமக்கு அளித்தார்—அதனால் நாம் பயன் பெற்றோம்—நமது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம் பணிவும் அன்பும் கலந்தது.

துன்புறும் எளியோர் துயரது தீர்ந்து
இன்புறும் வண்ணம் உண்மை இயம்ப
அஞ்சுவோன் வீரன் ஆகான்; மற்றும்
உற்ற துரைத்தலால் ஊறும் பழியும்
மற்றும் பல்லின்னல் வந்திடுமென்று
மெய்ம்மையைக் காக்கும் விரதம் விடுத்து
பொய்யுரைப் போரைப்பு விதனி லென்றும்
அடிமை யென்றே அறைந்திடுவோமே.

## அந்த ஜூலை பதிநான்கு;

குமுறிக்கிடந்தக் கூட்டம் கொடுங்கோலை எதிர்த்தது!
'வனவாசம்' செய்த மக்கள் வாளேந்தி நின்றனர்.

லண்டனும் மாஸ்கோவும், பாரிசும், வியன்னுவும் அந்தத் திருநாளை எழுச்சியுடன் கொண்டாடின! பெர்லின் நகரிலே வெற்றி விழாவு! கோபுர உச்சியிலே கெம்பீரமாகப் பறக்கவிடப்பட்டது. அந்தத் திருநாட்டின் கொடி! பல்வேறு நாட்டவரும், தத்தமது நாட்டின் நன்னுளெனக் கொண்டாடும் விதமாக அமைந்தது ஜூலை 14-ந் தேதி எனும் புரட்சித் திருநாள்! ஜூலை 14! உலக வரலாற்று ஏட்டிலே உன்னதமான இடத்தைப் பெற்றுவிட்டது. அந்நாளே வீர பிரஞ்சு மக்களின் வெற்றி நாள்! எதிரி நாட்டின் மீது போரிட்டுப் பெற்ற வெற்றியா? இல்லை! கொடுமையை எதிர்த்து கொடுங்கோலை எதிர்த்து, அன்று வரை குமுறிக்கிடந்தக் கூட்டம், அந்நாள்வரைக் அடக்குமுறையினுல் தாக்கப்பட்டு அடிமைப்பட்டு, 'இம் மென்ருல் சிறைவாசம், ஏன் என்ருல் வனவாசம்' என்ற நிலையிலே சிக்கிச் சிதைந்து. நசுக்கப்பட்டு, நாதியற்றுக் கிடந்த மக்கள் நிமிர்ந்து நின்று, புனல் சொரிந்து கண்களினின்று ஏகனலைக் கக்கி, பெருமூச்சை நிறுத்திப் பெரு முழக்கங் கிளப்பி, தருக்கர்களின் தாளைத் தொட்டுக் கிடந்த கரங்களிலே வாளேந்தி, விடுதலை! விடுதலை! என்ற புரட்சி கீதம் பாடிக்கொண்டு படை போல் திரண்டு, இடிபோல் ஆர்ப்பரித்து புயலெனக் கோபத்தை வீசி, போக போகத்திலே புரண்டு, பொதுமக்களை பொதி மாடுகளாக்கி அரசி

யலைக் கொடுமைக் கருவியாகக் கொண்டு மக்களை கசக்கிப் பிழிந்து, அவர்தம் மானத்தை மண்ணெனக் கருதி. மிதித்து' செருக்கு நிறைந்த சீமான்கள் எதேச்சதிகாரம் செய்து வந்ததை ஒரே அடியில், ஒரே நாளில் ஒரே பெரும் புரட்சியிலே அடித்து நொறுக்கி உருத் தெரியாத படி அடித்த நாள் அந்த ஜுலை 14,

எல்லோரும் இந்நாட்டு மன்னர்! வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா? மகாராசர்கள் உல காளுதல் நிலையாம் எனும் நினைவா? என்ற முழக்கம் கிளம்பிய நாள், முகாரி முடிந்து அடாணு ஆரம்பமான நாள்! மாடப்புறு வல்லூரைத் துரத்திய நாள்! மன்னர் மருண்ட நாள்! சீமான்களின் தலை சிதறிய நாள்! மதுக் கிண்ண மேந்திய மஞேஹரிகளின் இதழ்தரும் சுவையிலே இகத்தின் ரசத்தைக் கண்டு, பரலோக ரசம் பாதிரிமாரின் கைவசம் இருக்கிறது, கேட்டால் கிடைக்கும். அதற்காகத் தேடி அலைவானேன் என்று வதோன்மத்தர்கள். அரண் செல்லப் பிள்ளைகள். ஆணவ சொரூபங்கள் ஆடிபாடிக் கிடந்த கோலத்தை வேரறுத்த நாள்! ஓடப்பரெல்லாம் உதையப்பரான நாள்! விலங்கு பூட்டப்பட்டு வேதனையை அடைந்த கரங்களிலே வீரவாள் ஜொலித்த நாள்! விடு தலை நாள்! வீரரின் வெற்றித் திருநாள்! வெறியரின் வீழ்ச்சி நாள்!

மக்களை மாக்களாக்கிய இடம்
மண்மேடாயிற்று!

விழா! உலகெங்கும், ஊரெங்கும், உணர்ச்சியுள்ள வருக்கெல்லாம் உத்தம நாள், அந்த ஜுலை 14-ந் தேதி வீதிகளிலே களம்! வீடுகளே பாசறை! கையில் கிடைத்த

தெல்லாம் ஆயுதம்! காணும் கொடுமைகளெல்லாம் தவிடு பொடி! திட்டம் உண்டா? தீட்ட நேரமில்லை! மந்திராலோசனை உண்டா? அதற்கான மனப்பான்மை இல்லை சமயமறிந்து நடக்க வேண்டும் என்ற எண்ணமாவது உண்டா? இத்தருணம் தவறினல் மறுதருணம் வாய்ப்பது அரிது என்று யாவரும் கூறின நேரம் அது! அணிவகுப்பு? இல்லை! அவனைக்கேள், இவனைப்பார், அவனைக் கூப்பிடு, என்ற பேச்சு இல்லை! வேறு என்ன உண்டு! வெட்டு! குத்து'! இடி! கொளுத்து! கொல்! இந்தச் சப்தமே எங்கும்! மாளிகைகள் இடிந்து சரசரவென சரியும் சத்தம்! கட்டிடங்களிலே தீ மூட்டி விட்டதால் கிளம்பும் சத்தம்! இவைகளை மீறிக்கொண்டு பாஸ்டிலி! பாஸ்டிலி! என்ற பெருஞ் சத்தம்! ஆம் ஜூலை 14. பாஸ்டிலி தினம்! பயங்கர பாஸ்டிலி படுசூரணமான தினம்! பதைத்தெழுந்த பாமர மக்கள் தங்களை அதுவரை பயங்கரமான கொடுமைகளுக்கு ஆளாக்கிவைத்த பாதகச் சிறைக்கூடமான பாஸ்டிலியை இடித்துத் தூளாக்கி, மண்மேடாக்கிய நாள்! அந்தச் சிறைச்சாலையைச் சீற்றங் கொண்ட மக்கள் சிதறடித்த நாளையே இன்று பாரீஸில் மட்டுமல்ல, பெர்லினில், மாஸ்கோவில், லண்டனில், பல்வேறு நகர்களிலே கொண்டாடுகிருர்கள். ஜூலை 14-ந் தேதி பிரான்சு நாட்டு மக்கள் தங்கள் நாட்டிலே இருந்த பயங்கரச் சிறைச்சாலையான பாஸ்டிலியைத் தகர்த்தனர். என்ற போதிலும் அந்நாளைக் கொண்டாடும் உரிமை எனக்குமுண்டு! என்று கூறிக்கொள்ளாத நாடு இல்லை! ஒரு நாட்டின் நாள் உலகப் பொது நாள் ஆகிவிட்டது! பாஸ்டிலி பிரான்சில் வீழ்ந்தது என்ற உடனே ஒவ்வோர் நாட்டிலேயும் உணர்ச்சி பொங்கி எழுந்தது! ஏன்! பாஸ்டிலி பிரான்சு நாட்டுச் சிறைக்கூடம்! பாரிசில் கட்டப்பட்

டிருந்த பாதகப் படுகுழி ! பாமரரைச் சித்திரவதை செய்யும் சிறைக்களம் ! அது அன்று அழிந்தது. அந்தச் செய்தி. உலகெங்கணும் கொடுமைக்கு ஆளாகி இருந்த மக்களுக்கெல்லாம் தத்தம் நாட்டிலே உள்ள பாஸ்டிலிகளும் தொலையும் நாள் வந்து விட்டது என்ற ஆவேசத்தை ஊட்டிற்று. அக்கிரமக்காரரை. விழித்தெழுந்த மக்கள். வீரத்தால் வீழ்த்தினர் என்று கேட்டதும், நாட்டுக்கருகே உலாவிய புலி கொல்லப்பட்ட செய்தி கேள்விபட்டதும், நாட்டிலே ஒவ்வொரு வீட்டிலும் மகிழ்ச்சி உண்டாவது போல் உலகிலே நாகரீக உணர்ச்சிப் படை அனைவருக்கும் ஓர் மகிழ்ச்சி. எழுச்சி ஒழிந்தது, பாஸ்டிலி கொடுமை ஒழிந்தது என்று பல்வேறு நாட்டவரும் கூறினர். பாஸ்டிலியின் அழிவு பிரான்சிலே மட்டுமல்ல. பல்வேறு நாடுகளிலேயும் நாசத்தைக் கக்கிக் கொண்டிருக்க நயவஞ்சகனின் ஆட்சி வீழ்ந்து விடும் விழும் நாள் விரைவிலே உண்டு என்ற எண்ணத்தை ஊட்டும் இலட்சிய வாடையாகி விட்டது! அந்தப் பிரான்சுப் புரட்சி பிரபஞ்சப் புரட்சிக்கு பேராசிரியராக வரவேற்கபபட்டது. ஜூலை 14. ஒரு நாட்டிலே இருந்த ஒரு சிறைக்கூடத்தின் வீழ்ச்சிநாள் அல்ல. செல்வச் செருக்கு எனும் சிறைக்கூடம் எங்கெங்கு காணப்பட்டதோ அங்கெல்லாம் வீழ்ச்சி, இருமாப்புக்கு இறுதி எச்சரிக்கை விடுத்திடும் வீரம் விழிப்புற்ற நாளாயிற்று.

## பூவையரின் போகத்தில்
## புரண்டுகிடந்த பூபதிகள்

ஏ ! மனிதப்பதரே ! மண்டியிட்டு வாழவேண்டிய மாமிசப் பிண்டமே! அடிமையே! கட்டளை யிடுகிறேன். யோசிக்கிருயே, என்ன ? நட என்று கூறுகிறேன், நிற்கி

ருயா இன்னமும்? என்று எக்காளம் மிகுந்திருந்த காலம் மன்னனே சீமான்களின் சதுரங்கக் காய்; சீமான்களோ, சிருங்காரிகளின் சிறு விரலிலே, பெருநெறியைக் கண்டவர்கள், சிருங்காரிகளின் ஆயுதங்களோ சிற்றிடை, சிவந்த அதரம், கடை சிவந்த கண்கள், கனிரசக் கலசங்கள், கீதக் குரல், நடன நடை—இந்நிலையிலே, பஞ்சம் பசி தீர்த்துக்கொள்ளும் பாமரரின் உயிர் குடித்து, பாவையர் வாழ்வர். பாதி ராத்திரிப் பசியை அடக்கும் பாதகத் தொழிலுக்குத் தங்களை தத்தம் செய்து வரிகொடுப்பவர் கூலி மக்கள்! கேளிகைத்தேடி அலைவர் சீமான்கள்! ஒய்யாரியின் ஓயாச் சிரிப்பு! உல்லாசின் சல்லாபம்! இவையே கலை! கட்டழகியின் கண்ணைக் கண்டே காவியம் தீட்டப்படும்.

கோமளவல்லிகளின் கொவ்வை இதழுக்கு
காத்திருந்த கோமான்கள்

சீமான்களிடம் வரிகேட்கும் 'சிறுமதி' மன்னருக்குக் கிடையாது! பூமான்களின் புன்னகை போதாதா பூபதியின் அரண்மனைக்கு ஒளிதர! பஞ்சைப் பயல்களால் வரி தருவது தவிர வேறென்ன தரமுடியும். நாட்டை ஆளும் பாரத்தை நாதன் துணைகொண்டு தாங்கும் மன்னருக்கு! எனவே, ஏழை பராரியானவன். பராரி பட்டினியால் சவான்! கொவ்வை இதழுக்காக எதையும் தருவான்! இதுவே பிரான்ஸ்; பாஸ்டிலி வீழ்ச்சிக்கு முன்பு.

ஆயுள் பூராவும்
அங்கத்தின்மீது அக்கினிக் குழம்பு

"இப்படியும் வதைவதா?" என்று கேட்கும் துணிவு எவனுக்கேனும் பிறந்தால் பாஸ்டிலி! அரண்மனையிலே செல்வாக்குள்ள யாருடைய கோபமாவது எவன்மீதேனும்

பாய்ந்தால் பாஸ்டிலி! வரிக்கொடுமையைப்பற்றி பேசினுல் பாஸ்டிலி! வனிதாமணியைக் கேலி செய்தாளு! பாஸ்டிலி! சீமான்களின் சீற்றம், அந்தச் சிறைச்சாலேக்குத்தான் பாமரரைத் துரத்திற்று. அங்கே இருந்தது என்ன? இரும்புக் கம்பியும் கம்பளிப் போர்வை மட்டுந்தாளு! இல்லே! பகலிலே இரவு! பாதாளத்திலே அறைகள்! காற்று, வெளிச்சம், தண்ணீர், உணவு தாராளமாக உண்டா? இல்லே! சித்திரவதை எவ்வளவு அதிக நாட்களுக்கு செய்யமுடியுமோ அவ்வளவு காலம் கைதியின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். பாஸ்டில் என்ற பெயரைக் கேட்ட உடனேயே பயத்தால் அலறுவர்! அங்கே போனவன் திரும்பி வருவது உண்டா? அக்கினிக் குழம்பிலே போட்டாலாவது அரைநொடியிலே சாவது நிச்சயம். அதுவரைதான் வேதனே, பாஸ்டிலியிலே ஆயுள் பூராவுமல்லவா அக்கினிக் குழம்பு அங்கமெல்லாம் ஊற்றப்படும் என்றுகூறிக் கதறுவர். விசாரணேயின்றி, மன்னிப்பின்றி. அங்கம் பழுதானுலும் கேட்பாரின்றி, உடல் அழுகித் தாளுக உலர்ந்து, உயிர் ஒவ்வோர் துளியாகப் பிரியத் தொடங்கி. அவன் எலும்புக்கூடாகி, கண்பார்வை இழந்து, கைகால் முடக்கப்பட்டு, உடலிலே கடித்துக் கொண்டிருக்கும் உணியை ஓட்டவும் சக்தியற்று, அவனேக்கண்ணுல் பார்ப்பதே பார்ப்பவனுக்குத் தண்டனே என்று கூறத்தக்க உருவமாக மாறி, மரணத்துக்குத் தவம் கிடந்து, பிறகு மண்ணிலே புதைவான்! அந்த பயங்கர பாஸ்டிலியிலே வாலிபன் வயோதிகனுனுன்! வீரன் வெறியனுனுன். புத்திமான் பித்தனுனுன். வடிவழகன் அழுகு நோயனுனுன். அடக்குமுறையின் முழு மூளேத் திறமும் உபயோகிக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட இடம் அந்த பாஸ்டிலி. கனத்த சுவர்கள், அவைகளே அணேத்

துக்கொண்டு ஆழமான அகழிகள் இரும்புப் பலகைகளா லான கதவுகள் ; இமைக்கொட்டாது காவல் புரியும் கொடியவர் ; இது பாஸ்டிலி. எவ்வளவு அநீதி இழைக் கப்பட்டாலும்கூட ஏன் என்று கேட்க எவரும் துணியார் அவர்களின் செவியிலே பாஸ்டிலி என்ற சத்தம் வீழ்ந்த தும். அந்தப் பாஸ்டிலி வீழ்ந்தது ஜூலை 14-ல். அவனி களிப்படையாது இருக்குமா ?

பதினாரும் லூயி, பிரான்சை ஆண்டு வருகின்றான். பட்டத்தரசியின் சுண்டு விரலுக்குக் கிட்டே வருபவருக்கே அரண்மனை தயவு! மக்கள் உள்ளமோ கொதித்தது. ஆனால், எரிமலை வெடிக்கத் தொடங்கவில்லை. பாஸ்டிலி என்ற பயம். எரிமலைக்கு மேல்மூடியாகக் கிடந்தது. காதகனின் கருணையை காசுக்கு விற்கும் தரகர்கள், காமத் தால் கருத்தழிந்த சீமான்கள், கவலையால் கருத்துக் குழம் பிய மக்கள்!

சீமான்களோ வரி செலுத்தவில்லை. வரி கேட்கும் நெறியே தவறு. சீமான் என்ற பட்டத்துக்கு வேறு என்ன தான் அர்த்தம். சாதாரணமானவனும் வரி கட்டுவது. சீமானும் வரி கட்டுவதா? பண்ணை உண்டு. பாடுபட கூலிகள் உண்டு. அவர்கள் தேடிக் குவித்த பொருளை ஆடிப்பாடிச் செலவிடப் பாரிஸ் உண்டு. செல்வவான்கள் உண்டு. அன்னக்காவடிகளுக்கு பட்டினி உண்டு. ஏழு லட்சத்து ஐம்பதினாயிரம் மக்கள் கொண்ட பாரிசில். பசியோ பசி என்று பதறிய மக்களே பெரும்பான்மையினர். 1774-ல் இந்த பிரான்சுக்கு மன்னனானான் பதினாருவது லூயி. பட்டத்தரசி மேரினுக்கி ! அவளைச் சுற்றி ஜொலித்த மாதர்கள், உடல் குலுக்கி ஊரை அழிக்கும் உல்லாசிகள். அரண்மனையிலே ஆனந்த அமளி, வெளியே

வேதனைப்புயல், இந்நிலை எப்படி இருக்க முடியும்? அரண்மனையிலே, சுரண்டிப் பிழைக்கும் சுந்தரிகளும் சோம்பித் திரியும் சொகுசுக்காரரும் நடனமாடினர். பராரி தரும் வரிப் பணம், பரிபாலனச் செலவுக்கு . அதிலும் பளிங்குக் கிண்ணத்திலே பலவித மது ஊற்றி. வைர மோதிரக் கையினுள் பொன்னுடைப் பூமகனுக்குப் பூரிப் புடன் தரும் விருந்து வைபவங்கள் நடைபெற வேண்டும். அத்தகைய பரிபாலன செலவுக்குப் போதுமா? பாவையர் மீது சீமான்கள் கொண்ட மோகத்தைப்போல பணம் வளருமா? பணம் இருக்கும் இடம். மாளிகைகளில், பண்ணைகளில் அவர்களோ மன்னரின் அன்புக்குப் பாத்திரமானவர்கள், வரி தரும் வேலை கிடையாது, ஏழை மட்டுமே தந்து எந்த அரசாங்கத்தால் நடத்த முடியும்? பணம் இல்லை பரிபாலனச் செலவிற்கு!

தூங்கிக்கிடந்த மக்கள் தோள்தட்டி நின்றனர்!

சர்காரை சீர்த்திருத்த முயன்றவர்களிலே ஒருவர் பிரான்சை படம் பிடித்தார். "பிரான்ஸ், ஒரு ராஜ்யம் அல்ல! பலப்பல தனித்தனி ராஜ்யங்களின் கதம்பம்! ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லை. எல்லாவற்றிற்கும் பொதுவான நிர்வாக யந்திரமில்லை. பல வட்டாரங்கள் வரி செலுத்துவதே இல்லை. சில வட்டாரங்கள் வரி செலுத்தி செலுத்தி வறண்டு விட்டன பணக்காரர்களுக்கு வரிச்சுமை மிக மிக இலேசாக யிருக்கிறது ஏழையின் இடுப்பே முறிகிறது; சீமான்கள் அனுபவிக்கும் அதிகார பாத்யதையால், சமுதாய அமைப்பிலே சம எடை கெட்டுவிட்டது; மிக மிக மோசமான ராஜ்யம். ஊழல் அமோகம்,'' சரி, படம் பிடித்தது சரிதான் "ராஜ்யம் மோசமாக இருக்கிற காரணத்தால் தானே உம்மை

அமர்த்திறேும் ஒழுங்குபடுத்த " என்று யாரேனும் கூறி விட்டால் என்ன செய்வது என்று அஞ்சிப்போலும் அந்த ஆசாமி, பிரான்சின் நிலைமையைக் கூறிவிட்டு " இன்றுள்ள நிலையிலே இந்த ராஜ்யத்திலே ஆட்சி செய்வது ஆகாத காரியம் " என்று தீர்மானமாகக் கூறி விட்டார். ஐரோப்பாவின் பூந்தோட்டம் பிரான்சு ! அங்கு பணம் இல்லை துரைத்தனம் நடத்த. பணம் படைத்த சீமானுக்கோ மனம் இல்லை வரிசெலுத்த! அந்தச் சிறு கூட்டத்தை அடக்கவோ திறனில்லை மன்னனுக்கு! மதியுரைக்க மந்திரி இல்லை! மக்களுக்கு பாஸ்டிலி இருந்தது!

பிரான்ஸ் நாட்டு ராஜரீகத்தை நடத்த முடியாது என்று கூறியும் விட்டார் ஒரு பிரமுகர்; மன்னர் ஏதேதோ செய்து பார்த்தார். மந்திரிகளை புதிது புதிதாக நியமித்தார். அவர்கள் புதுப் புது திட்டங்கள் தீட்டினர். பலன் இல்லை ! கடைசியிலே கதிகலங்கிய காவலன், புயலைத் துணைக்கு அழைத்தான்! மக்கள் மன்றத்தைக் கூட்டினுன்! மக்கள்! மன்னரால் கைவிடப்பட்டுக் கிடந்த மக்கள் — கூடினர். கவலை தோய்ந்த முகத்தினருக்கும கொஞ்சம் களிப்புப் பிறந்தது. மக்களை மன்னர் நாடுகிறார் ! ஏன் ? நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற தத்துவம கோழை நெஞ்சிலே குடைந்து சென்றது. நிமிர்ந்து நின்றுன்! தூங்கின போதும் தோள்தட்டு என்ற உணர்ச்சி உரைத்தது. குகையை விட்டுப் புலி கிளம்புவது போல் கிளம்பினர்.

எரிமலை குமுறத் தொடங்கிற்று ! மக்கள் மன்றத்தினர் துரைத்தனம் நடத்தும திட்டம் தயாரித்தனர். விடுதலை என்ற மையிலே, புரட்சி என்ற பேனவைத் தோய்த்து எடுத்து, சீறிடும் சீமான்களைக் கண்டு சிரித்தனர்

மன்னனை மறந்தனர். அரசாளப் பிறந்தவர் அவர் மட்டுமா ? பிரான்சு நாட்டவர் அனைவருமே அரசாளப் பிறந்தவர் என்று ஆர்ப்பரித்தனர். 1789 ஆம் ஆண்டு ஜூன் பத்தாந் தேதி மக்கள் மன்றம், "தேசிய மகாசபை இது. இந்நாட்டுக்குத் தக்கதோர் ஆட்சி முறைத் திட்டம் வகுத்து அமுலுக்குக் கொண்டுவரா முன்பு, இந்த சபை கலையாது" என்று கூறிவிட்டது. அரண்மனையிலே மன்னன், அன்னக்காவடிகள் அரசாள நாங்கள் வழி அமைத்துத் தருகிறோம் என்று கூறுகின்றனர் வெளியே.

அரண்மனைக்குள்ளே ஆர்ப்பாட்டக்காரர் கூடினர் ; அரசனுக்குத் தூபமிட்டனர். அதிகார வெறியை ஏவி விட்டனர். துருப்புகள் பவனி வரத் தொடங்கின. புயல் வலுத்தது !

" போக்கிரிகளைச் சுட்டுத் தள்ள வேண்டும். "

"காலாடிகளிடம் நாட்டை விட்டு வைப்பதா? "

" பிடித்துத் தள்ள வேண்டும் பாஸ்டிலியில் "

" துருப்புகளுக்கு உத்திரவுப் பிறப்பித்தால் வெறி நாய்களை சுட்டுத்தள்ள மாட்டார்களா ?"

" மன்னனை மதிக்காமல் மமதையோடு கூவும் இந்த மக்களைக் கண்டு நாம் சும்மாயிருப்பதா ?"

" மானம் போகிறதே "

" பரப்பரைக் கௌரவம் பாழாகப் போகிறதே "

" கிளம்புவோம், சிதறடிப்போம், " சீமான்கள் சிலர் கூடினர் அரண்மனையில், ஆணவத்தை இதுபோல் கக்கினர் கடைசி முறையாக ! ஆளத்தெரியாத மன்னன் மக்களின் ஆத்திரக் கடலைக் கடக்க இந்த மண் குதிரைமீது ஏறிக் கொண்டான். மக்களைக் கூட்டிய மன்னன் பிறகு அவர்களைக் கடுமையான முறையினுலே அடக்குவது என்ற விபரீத எண்ணம் கொண்டான். புயலை எதிர்த்தான்! சீறும் நாகத்தின் முன்பு சிறுபிள்ளையாட்ட மாடினுன்.

மக்கள், மன்னரின் படை கிளம்புவது கண்டனர். கையில் கிடைத்ததை எல்லாம் தூக்கினர். 1789 ஜூலை 14-ந் தேதி போர்க்கோலம் பூண்ட மக்கள் எங்கே பாய்ந்தனர் ? பாஸ்டிலி! மன்னன் அடக்கு முறையை துவக்கத் துணிந்தான் என்று தெரிந்ததும் மக்கள் மனதிலே தோன்றிய முதல் எண்ணம் பாஸ்டிலி ! பாஸ்டிலி தான் நம்மைப் போன்ற ஏழைகளைச் சீமான்களின் ஏதேச்சாதிகாரத்தை எதிர்க்கத் துணிந்தவர்களைக் கொடுமை செய்யும் இடம். நாமும் சிக்கிக் கொண்டால் அந்தப் பாழும் சிறைச்சாலைக்கு இழுத்துச் செல்லப்படுவோம். யாரால் சகிக்க முடியும் இந்த இம்சையை ? அந்தோ எவ்வளவு பேரை இம்சித்த இடம், அந்த பாஸ்டிலி ஒழிக ! ஒழிகக் கொடுமை !! என்று புரட்சி முழக்கமிட்டது ! அந்த புரட்சிக் கீதம் எழுப்பிய நாள்தான் ஜூலை 14 !

புரட்சிப் புயல் பாஸ்டிலியைத் தூள் தூளாக்கியது ; எங்கணும் வெற்றி முழக்கம் கேட்டது. அந்த வெற்றி முழக்கத்தை எழுப்பிய நாள்தான் ஜூலை 14 !

# இதோ திராவிடத் தந்தை

" கோர்ட்டாரவர்கள் தாங்கள் திருப்தியடையும் வண்ணம் எவ்வளவு அதிக தண்டனையைக் கொடுக்க முடியுமோ அவைகளையும், பழி வாங்கும் உணர்ச்சி திருப்தி அடையும் வரைக்கும் எவ்வளவு தாழ்ந்த வகுப்பு கொடுக்க உண்டோ அதையும் கொடுத்து, இவ்வழக்கு விசாரணை நாடகத்தை முடித்து விடும்படி வணக்கமாகக் கேட்டுக் கொள்கிறேன். எவ்வளவு நியாமான லட்சியத்தை அடைய வேண்டுமானல் அதற்காகக் கஷ்டநஷ்டகளடை தல் என்னும் விலை கொடுக்க வேண்டுமாதலால் அவ்வாறு வேண்டிக் கொள்கிறேன். "

காளையல்ல பேசினது, கிழவர் ; எனவேதான், காளைகள் ஆயிர மாயிரம், அவருடைய குரல் கேட்டுக் குதூகலிக்கின்றன.

ஒருமாலை—மூன்றரைமணி இருக்கும்—முகத்தில் "ஈ ஆடாது" உட்கார்ந்திருக்கிருர் மாஜிஸ்திரேட். பசி தெரியாமல், பார்த்த கண்களைக் நீக்கமுடியாமல், தமிழர்கள் குடும்பங் குடும்பமாக உள்ளனர் கோர்ட்டுக்கு உள்ளேயும் வெளியேயும். சட்டம் ஒருபுறம்—சமர் மற்ருேர் புறம். ஆச்சாரியார் ஓர்புறம்—பெரியார் இராமசாமி ஒருபுறம். கட்டாய இந்தி முறைத்துப் பார்க்கிறது—கன்னித் தமிழ் எழிலுடன் எதிர்நோக்குச் செலுத்துகிறது. தண்டனை தரும் அதிகாரம் அவர்கட்கு — தமிழை காக்கும்

உரிமையைத் தாங்கிக்கொண்டிருக்கிறார் பெரியார். நடப்பது காங்கிரசாட்சி – சம்பவமோ, சிறைக்கு மக்கட் தலைவனை அனுப்புவதாக இருந்தது, பெரியார் பேசினார் விடுதலை வீரர்களின் மொழியிலே, விலை கொடுப்பேன் உரிமைக்காக என்றார். எடு சட்டத்தை: கொடு தண்டனை: முடி இந் நாடகத்தை என்று முழக்கமிட்டார். வயது என்ன ? அறுபதாம், கலியாணப் பருவம் ! பேச்சிலேயோ தீ ; போக்கோ முறுக்கேறின படைத் தலைவருடையது ! ஏன் ? தமிழகம் அவர் பக்கம் நின்றது.

மாஜஸ்திரேட் என்ன சொல்லப் போகிறார் ? எமது தலைவரின் நிலை என்ன ஆகும் ? கூண்டிலே சிங்கம் ! கும்பலாகத் தமிழர் நின்று பார்க்கின்றனர் ! அரியணை மீதோ ஆச்சாரியார் என்று வருந்தினர் மக்கள். வாய் திறந்தார் மாஜிஸ்திரேட்.

“ 2 வருஷம் !” என்றார்.

இரண்டாண்டுகளா ? எமது தலைவருக்கா ? இந்தி வேண்டாம் என்பதற்கா ! இரும்பிலே இருதயம் செய்து அமைத்துக் கொண்டனரோ ஆட்சியாளர்கள். கரும்பினும் இனிக்கும் எமது தமிழைக் காத்திட கிளம்பினதற்கா இத் துணை கடுந்தண்டனை—என்று எண்ணி திகைத்தனர் தமிழர். திகைப்புண்ட தமிழரின் செவியில், மாஜிஸ்திரேட் மேலும் சில சொல் கூறியது வீழ்ந்தது.

> “ 2 வருஷம் தண்டனை ; அதோடு அபராதம் 2000 ரூபாய்—கட்டத் தவறினால் மேற்கொண்டு ஒரு வருஷம். ”

1938 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 6 ந் தேதி மாலை 3-25 க்கு தலைவர் பெரியாருக்கு 3 வருடத் தண்டனை

விதிக்கப்பட்டது—வெடிகுண்டு வீசியதற்காக அல்ல. தமிழ் வேண்டும் தமிழருக்கு—இந்தியை கட்டாய பாடமாக்கக் கூடாது என்று சொன்னதற்கு.

திகைத்த தமிழரை ஒரு முறை நோக்கினார். திக்விஜயம் செய்யும் மாவீரன் முறையில். கண்ணீர் திவலைகளைக் கண்டார். சால்வையை இழுத்துப் போட்டுக் கொண்டார். ஒரு புன்சிரிப்புடன் பேசினார் பக்கம் சென்றவரிடம், " நான் இப்போது ஓர் கைதி !" என்று.

ஆம் ! தமிழர் தலைவரைக் கைதிக் கோலத்திலே கண்டனர் அன்று. அவருக்கு அது எட்டாவது முறை. தமிழர் அந்தக் கைதிக்காகக் கண்ணீர் விட்டனர். குழந்தைகள் முதியவர் போலாயினர்; முதியவர் குழந்தைகளெனக் 'கோ' வெனக் கதறினர்.

பெரியார் இராமசாமி 5544 ம் நம்பர் கைதியானார். சென்னைச் சிறை புகுந்தார். வெளியே தமிழர் தம் தலைவனுக்காக உருகினர். சிறையோ புதிய 'கௌரவம்' பெற்றது. செந்தமிழ் நாட்டுச் சிங்கம்-எங்கள் ஈ. வே. ரா. தங்கம்—வந்தார் வந்தார்—என்று சிறையிலே கீதம் கிளம்பிற்று. ஆம்! சிறைக்கு வெளியே மட்டுமா, உள்ளேயும் இருந்தது பெரியார் பெரும்படை !

வழக்கு மன்றத்திலே அவர் ஆற்றிய வீர உரை, அவர் வாழ்க்கையின் திறவுகோல் எதுவென்பதைக் காட்டுவதாகும்.

லட்சியத்தை அடைய கஷ்டநஷ்டம் அடைதல் எனும் விலைகொடுத்தாக வேண்டும்—என்றார். ஆம் ! கொடுத்திருக்கிறார்' எட்டு முறை சிறை சென்றது மட்டும் அல்ல, விலை.

எந்த மக்களின் சார்பாகப் பேசுகிருரோ, எந்தத் தமிழ் இனத்துக்காகத் தளராது உழைக்கிருரோ, அதே இன மக்களின் கேலிக்கண்டனம், சந்தேகப் பார்வை, இழிமொழி இவைகளைப் பல்லாண்டுகளாக பெற்று இருக் கிருர்—ஆனால் பாதையிலிருந்து வழுவியதில்லை!

விலை கொடுத்தார் ஓர் சிறந்த லட்சியத்துக்காக! என்ன அந்த இலட்சியம்? அதனைத் தமிழர் அறிதல் வேண்டும். அவருடைய விழாக் கொண்டாடப்படும் இந் நாள் அவரே பேசுகிருர் — கேளுங்கள். அவருடைய இலட்சியம் என்னவென்பது தெரியும் — அது உங்கள் இலட்சியம் என்பதை உணர்வீர்கள்.

"திராவிடர்களின், தமிழர்களின் நிலைமையைத் தெரிந் துக்கொள்ள விரும்புகிறவர்கள், முதலாவது திராவிடநாடு தனிநாடு" என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

திராவிட நாடு, தெளிவாக ஒரு தனிப்பட்ட சமூகத்தை யுடையது. திராவிட மொழியான தமிழ்மொழி எத்தனை பிரிந்திருந்தும், ஆரியரோடு சம்பந்தப்படாமல் ஒரு தனிப்பட்ட இனமாக இருப்பதற்குத் தமிழ் மொழியின் தன்மைக்கு நான் வந்தனம் செலுத்துகிறேன்.

திராவிட நாடு தன்னுடைய சுதந்திரத்தை விட்டுக் கொடுக்க மறுப்பதே தொன்று தொட்டு வடநாட்டிற்கும் திராவிட நாட்டிற்கும் நடந்த சண்டைக்குக் காரணம்.

சூதாட்டத்தில் காய்களை உருட்டுவதுபோல் சில மனி தர்களை உருட்டி விட்டு திராவிட நாட்டுப் பிரிவினையை அடைய முடியாது. திராவிட இனத்திலுள்ள ஒவ்வொரு

வனும் விடுதலை பெறவேண்டுமென்று முழுமனதுடன் தீர்மானித்தாலே திராவிட நாடு இலகுவில் பெறமுடியும்.

ஒருவனுடைய நாட்டில் வேறு ஒருவன் வந்து ஆதிக்கம் செய்யும்படியாகவும், நாட்டுக்குடையவனை சூத்திரனுக வும் கீழ்ஜாதியாகவும் செய்திருக்கும் செய்து வரும் ஆட்சி, எப்படிப்பட்டதாஞலும் அது கொடுங்கோன்மை ஆட்சியே யாகும்.

இன்று நமக்குத் திராவிடர் என்கிற பெயரே இல்லை தமிழர் என்கிற பெயரே இல்லை. சூத்திரர், தீண்டப் படாதவர், நாலாம் ஜாதி, ஐந்தாம் ஜாதி என்கிற பெயர் கள் தான் இருக்கின்றன. சரியா ? இது உங்களுக்குச் சம்மதமா ? இது மாற்றப்பட வேண்டாமா? அதற்காவன செய்ய வேண்டாமா ?

இதைச் செய்வதை விடவா, மந்திரிப் பதவி, வைசிராய் மெம்பர் பதவி, ஆலோசனையாளர் பதவி, கவர்னர் பதவி ஆகியவைகள் பெரிதும் அவசரமும் அவசியமுமானவை என்று கேட்கிறேன்.

முதலில் சமுதாயத்தில் பிறவியின் பேரால் உள்ள பேதங்களை ஒழிக்கவேண்டும். அதுவே, இந்நாட்டு சமதர்மத்திற்கு முதல்படியாகும். அதனுலேயே, பொருளாதார சமதர்மமே மனித சமூக சாந்திக்கு மருந்து என்று கருதி யிருக்கும் நான் சமுதாயத்தில், வாழ்க்கையில், சமதர்மத்தை முக்கியமாய் வலியுறுத்தி வருகின்றேன்.

நம் நாட்டில் இன்று ஜாதி பேதங்கள் ஒழிந்து மக்கள் யாவரும் பிறவியில் சமம் என்கின்றதன் சமதர்ம முயற்சியே முதலில் செய்யவேண்டியதாய் இருக்கிறது.

சமூகத்தில் மேல்ஜாதி கீழ்ஜாதி அடிமை ஜாதி என்பவைகள் இருப்பதோடு. ஆண் பெண் தலைமைகளில் உயர்வு தாழ்வு இருந்து வருகிறது. இவை தவிர, ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளி தன்மையும் இருந்து வருகிறது. இவற்றுள், சில இயற்கையாக ஏற்பட்டதாகவும் சில முயற்சியால் செய்கையால் ஏற்பட்டதாகவும், இவ்வளவுக்குக் காரணம் மனிதன் அல்லவென்றும் சொல்லப்படுகிறது, இவற்றையே மேல் நிலையில் உள்ளவனும் கீழ் நிலையில் உள்ளவனும் நம்பிக்கொண்டிருக்கிறன். இந்த மூட நம்பிக்கைதான் வெகுகாலமாக மனித சமூகத்தில் எவ்வித மாறுதல்களும் ஏற்படுத்துவதற்கில்லாமல் துடித்துக்கொண்டு வருகிறது.

இந்த மாபெரும் சனியனை ஜாதி பேதத்தொல்லைகள் மனித சமூகத்தை விட்டுவிட்டுத் தொலையவேண்டுமானல் மனிதனுக்கு விஞ்ஞான அறிவும், நாட்டில் விஞ்ஞான வளர்ச்சியும் தேவை.

கஷ்டமானதும் இழிவானதும் ஆனவேலை செய்பவர்கள் எல்லாம்—கீழ்ஜாதியாகவும், சுகமாகவும் மேன்மையாகவும் உள்ள வேலை செய்பவர்கள் மேல் ஜாதியாகவும் ஒரு வேலையும் செய்யாமல் ஊரார் உழைப்பில் வயிறு வளர்த்துக்கொண்டு மக்களை ஏமாற்றிக்கொண்டு வஞ்சித்துத் திரிகிறவர்கள் மகா மகா மேல் ஜாதியாகவும் ஏற்பட்டதற்குக் காரணம் விஞ்ஞான அறிவில்லாததே.

மேனுட்டிலே இம்மாதிரியான தொல்லை அநேகமாகத் தீர்ந்துவிட்டது.

விஞ்ஞான வளர்ச்சி காரணமாக சமத்துவம் அந்தச் சமூகத்தில் உண்டாக மார்க்கம் ஏற்பட்டுவிட்டது. நாம் என்ன கூறினாலும் இனிமேல் தமது சந்ததியார் பழைய தொழில்முறை, ஜாதிமுறைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது உறுதி.

"எனக்குத் தொழிலாளர்களிடம் உண்மையில் அன்பும் பக்தியும் கவலையும் வேறெதையும்விட அதிகம் என்பதை உண்மைத் தொழிலாளர்கள் 15, 16 வருடமாகத் தொழிலாளருடன் பழகுவர் அறிவர்."

காதினிக்கப் பேசுபவர்களைக் கண்டு தொழிலாளர்கள் மயங்குவது அறிந்து பெரிதும் வருந்துகிறேன். 15 ஆண்டுகட்கு முன்பு நாகையில், ரயில்வே வேலை நிறுத்தம் நடந்த போது அதிலே கலந்துகொண்டு பாடுபட்டு அதற்காக நான் சிறை சென்றதை அக்காலத் தலைவர்கள் உணர்வார்கள்.

தொழிலாளர்களின் விடுதலையே தமிழர்களின் விடுதலை; பார்ப்பனரல்லாதாரின் விடுதலையாகும்.

ஒரு காலத்தில் இங்கிலாந்தில் அந்நிய நாட்டுத்துணி கட்டினால் 30 பவுன் அபராதம் விதிக்கச் சட்டம் இயற்றினார்களாம். அவர்களுடைய நெசவுத் தொழிலை விருத்தி செய்ய இச் சட்டத்தை ஏற்படுத்தி இருந்தனர். இன்று நம்மில் 100-க்கு 60, 70-பேர் ஆமதாபாத் போன்ற வெளி மாகாணத் துணிகளை அணிந்திருப்பதைப் பார்க்கிறோம்; பெண்களும் ஆமதாபாத் சீலைகளைக் கட்டுகிறார்கள்.

ஆமதாபாத் முதலிய வெளிநாட்டு, அதாவது திராவிட நாடு அல்லாத நாட்டுத் துணிகளை நாம் தடுத்துவிட்டால்

நமது கைத்தொழில் வளர்ச்சி அடையும்; கைத்தறி நெச வாளர்களின் துன்பம், வறுமை, கஷ்டம் ஒழிந்து போய் விடும்.

எந்த மனிதனும் மற்றொரு மனிதனுக்கு உபகாரியாக வும், கடைசிபட்சம் தன்னால் மற்றவனுக்குத் துன்பம் தராதவனாகவும் இருப்பதே பெரிய ஒழுக்கம், மதம் என்று சுயமரியாதை இயக்கத்தார் கருதி இருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் ஒழுக்கத்தைப்பற்றி ரஷ்ய புரட்சிவீரர் லெனின் பொதுவுடைமைச் சிறுவர்கள் கூட்டத்தில் பேசிய பேச்சை உங்களுக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதாவது: "பொதுவுடமைக்காரர்களுக்கு ஒழுக்கம் இல்லை என்று நம் எதிரிகள் சொல்லுகிறார்கள். அது தவறு நாம்தான் சமூகத்தின் உண்மையான ஒழுக்கங்களை கையாள்வதோடு மற்றவர்களையும் ஒழுக்கமாக நடவுங்கள் என்று கட்டாயப் படுத்துகிறோம். அதற்குப் பொது உடைமை ஒழுக்கம் என்று பெயர். நம்முடைய ஒழுக்கத் திற்கும், மதவாதிகள், பணக்காரர்கள் ஒழுக்கத்திற்கும் வித்தியாசமுண்டு, அவர்களது ஒழுக்கங்கள் ஏழை மக்க ளுடையவும் பாமர மக்களுடையவும் கண்களில் மண்ணைப் போட்டு பலன் அனுபவிப்பதற்கு ஆக ஏமாற்றுஞ் செய் கிற சூழ்ச்சிகளேயாகும். நமது ஒழுக்கமெல்லாம் ஒருவ னால் ஒருவன் ஏமாற்றப்படாமலும், ஒருவனாலொருவன் வருத்தப்படாமலும் இருக்கும்படியானவைகளாகும். பாட்டாளி, ஏழை மக்களுடைய நன்மையே பிரதானமாகக் கருதுவதுதான் நமது ஒழுக்கம்" என்று லெனின் சொன் னார். சுயமரியாதைக் காரர்களாகிய நாமும் தனிப்பட்ட எந்த வகுப்பாருடையவும், சுயநலத்துக்கு மாத்திரம் பயன்

படும் எந்த ஒழுக்கத்தையும் ஒப்புக் கொள்ளாமல், எல்லா மக்களுக்கும் எந்த வகுப்பாராலும், எந்த நிலையிலுள்ள வர்களாலும், எந்த மதக்காரராலும் யாவருக்கும் ஒன்றுபோல் பயன்படும்படியான காரியங்களையே நாம் ஒழுக்கம் என்கிறோம். இதனால் சுய நலத்தையே பிரதான மாய்க் கருதி கற்பித்துக் கொண்ட ஒழுக்கங்களை உடைத் தெரிவது சுயமரியாதைக்காரர்கள் கடமை என்பது வியங்கும்.

வயது சென்ற பெரியார்கள், மானமற்றச் செல்வப் பித்தர்கள், பதவிப் பித்தர்கள் நிலை எப்படியோ இருக்கட் டும். வாலிபர்களாகிய நீங்கள் உறுதியுடனும் துணிவுட னும் நம்பிக்கையுடனும் முன்வாருங்கள். ஒரு பத்து வரு டத்திற்குள் பெரியதொரு சமுதாயப் புரட்சி நடத்தி மான மும் விடுதலையும் பெற்று விடலாம்.

"நான் ஒரு எதிர் நீச்சுக்காரன். என்ன காரணத் தாலோ நம் நாட்டு மக்களின் பெரும்பான்மையான அபிப் பிராயத்துக்கு நான் மாறுபட்டவனாக இருந்து வருகிறேன். பழமையைப் பாராட்டுவது நமது மக்களுக்கு ஒருபெருமை யாய் காணப்படுகிறது. நானோ பழைய பித்தை வெறுக் கிறவனாக இருக்கிறேன். அதனாலேயேதான் வெகுபேர்க ளால் வெறுக்கப்படுகிறேன். ஆனாலும் அறிவாளிகள் சீக் கிரம் என் பக்கம் திரும்பிவிடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது."

அவருடைய நம்பிக்கை வீண்போகவில்லை! அறிஞர் உலகு இன்று அவர் உரையை மறுப்பதில்லை! வீரர் உலகு அவர் செயலை பாராட்டவோ, துணைசெய்யவோ தயங்க வில்லை! வாலிப உலகு சம உரிமைப் போர் படையை

அமைக்கத் தவறவில்லை ! வீணர் என்ன கருதிடினும். அவருடைய நம்பிக்கை வீண்போகவில்லை என்பது தெளிவாகக் காட்டும் பல அறிகுறிகள் தோன்றிவிட்டன.

அவர் எதிர் நீச்சுக்காரர்தான்! ஆனால் அதிலே அவர் வெற்றி பெற்றுவிட்டார்.

"மகாபாவி ! புராதனகால ஏற்பாட்டைக் குறை கூறுகிறனே ! வாய் புழுக்காதோ ! ரௌரவாதி ! நகரமன்றோ கிடைக்கும் !"

"கர்ஜிக்கட்டும் கண்டிக்கட்டும் ! கவலையே வேண்டாம். எத்தனையோ பேர், இதுபோல் முன்பெல்லாம் கத்தினர். கண்டது என்ன? அபஜெயம் ! அதேதான் இவனுக்கும். என்னதான் அசகாயசூரனுக இருக்கட்டும். நமது பழைய கால ஏற்பாடோடு மோதிக்கொண்டால், அபஜெயம் நிற்சயமன்றோ!"

ஏன் இந்த வீண் வேலை! இப்போது பழையகால ஏற்பாடுகள், என்ன உள்ளன. லோகம் மாறிண்டிருக்கு ஆச்சார அனுஷ்டானுதிகள் கால வேகத்தாலே அடியோடு மாறிவிட்டன. செத்த பாம்பை அடிக்கிறமாதிரி, எதற்காக இவர் ஜாதி குலம் ஆச்சாரம் சாஸ்திரம்னு கண்டித்துக் கொண்டு இருக்கணும் ? அனுவசியம் !"

"அவர் சொல்வது உண்மை ; நிச்சயமாய் பேதம் ஒழிந்து போகத்தான் வேணும். எல்லோரும் சகோதர பாவத்தோடு வாழத்தான் வேண்டும். அதுதான் சிலாக்கியம். ஆனால், அவசரப்படக்கூடாது. மெள்ள மெள்ள நடக்க வேண்டிய காரியம் "

"யார் இப்போது, பலஜாதி பலகுலம் இருக்க வேனும்னு வாதாடுவா! அதெல்லாம் ஒழியத்தான் வேணும் அதற்காகத்தான் சுயராஜ்யம் வரவேணும்னு சொல்ரு பெரியவா. அதுக்காகத்தான் தற்சமயம் பாடு பட வேண்டும். சுயராஜ்யமே வந்தானதும் ஜாதிபேதம் முதலிய சனியன்களைத் தொலைக்கிற காரியந்தான் செய்தாக வேணும். நடக்காமலா போகும். நிச்சயமாக நடக்கும்."

சாபம், கோபம், கேலி, சமாதானம், சமரசம் என்று படிப்படியாக பழமையின் காவலர், பேசிவந்த விதத்தை மேலே பொறித்திருக்கிறோம். இந்த மாறுதல், பெரியாரின் வெற்றி! அதற்கான விலையைக் கொடுத்து அந்த வெற்றியை அவர் பெற்றார்.

அவருடைய இலட்சிய பூமியில் இல்லாமை, போதாமை, அறியாமை இருக்காது.

திராவிடநாடு திராவிடருக்கே!

என்ற ஒரு வாக்கியத்துள் அடங்கி இருக்கும். கருத்துக்களை, அவருடைய மொழியின் மூலம். ஓரளவு விளக்கி உள்ளோம். அந்த 'இலட்சிய பூமியை' அடைய அவர் பாடு பட்டுவரும் பாடு, கொடுத்த விலையும் சாமான்யமல்ல.

அஞ்சா நெஞ்சுடன் அறிவுக்காகப் போராடும் ஆற்றல் மிக்க பெரியார் வாழ்க ! என்று இன்று தமிழகம் வாழ்த்துகிறது.

# விதைக்காது விளையும்

விதைக்காது விளையும் கழனி எப்படி இருக்கமுடியும்? ஏன் முடியாது? உழைக்காது வாழும் மனிதர்கள் வாழும் போது விதைக்காது விளையும் கழனி ஏன் இருக்காது? உழைக்காது வாழும் மனிதர்கள் இருப்பது மட்டுமல்ல. ஊரையே ஆட்டி வைக்கும், அரசனையே ஆட்டிப்படைக் கும் மனிதர்களும் இருந்திருக்கிறார்கள் இருக்கிறார்கள். அரசன் உழைப்பதில்லையே தவிர, ஊர்க்கோபத்துக்கு வேறு வேந்தரின் படையெடுப்புக்கும் அஞ்சி வாழ வேண்டும். மன்னன் ஆளப் பிறந்தான் என்ற எண்ணம் மக்கள் மனதிலே ஆழப் பதிந்திருக்கும் வரையிலேதான் மன்னன் மனதிலே மணிமுடி தரிந்து வாழ முடியும். கோபமோ குமுறலோ கொப்பளித்தால், கோல் உடையும். ஒரு அரசு போனால் மற்றோர் அரசு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடும், அவன் இருக்க முடியாது. முடிகவிழ்ந் தால், பிறகு மீண்டும் சிரம் ஏறும் என்றும் உறுதியாகக் கூறமுடியாது. ஆனால், அரசர்களுக்கு இருக்கும் இந்த ஆபத்துங்கூடத் தங்களை அண்ட முடியாதபடியான அரண் அமைத்துக்கொண்டு. ஆண்டிக் கோலத்திலே இருப்பினும் அரச போகத்தையும் அனுயாசமாகப் பெறக் கூடிய நிலைபெற்று நெடுங்காலமாகவே அந்த நிலை குலை யாமல் பார்த்துக்கொண்டு வாழும் கூட்டம் ஒன்று இருக்கிறது.

* * *

ஆச்சரியமான பல உண்மைகள் உலகில் உண்டு. பெரியதோர் யானை ; பித்துபிடித்ததுபோல் ஓடும், எதிர்ப்

பட்டோரையும் தாக்கும், அதன் கலகத்துக்கும் கோபத்துக்கும் காரணம் தெரியாமல், மக்கள் திகைப்பர். கடைசியில் பார்க்கப் போனால், அதன் காதிலே புகுந்து கொண்ட சிறு வண்டு செய்த சேட்டையால் குன்றென உடல் படைத்த கரி, அங்ஙனம் ஆடி அலைந்து, ஆபத்தையும் உண்டாக்கிற்று என்பது தெரியவரும், மிருகங்களிலே மட்டுமென்ன மனிதர்களிலேயும் இந்த விசித்திரம் உண்டு, வீராதி வீரனாயிற்றே இவன், எப்படி ஒரு வீணனிடம் அடங்கிக் கிடக்கிறான் என்று ஆச்சரியப்படுவோம். சில சம்பவங்களைக் காணும்போது, ஆனால் கொஞ்சம் ஆராய ஆரம்பித்தால் தெரிந்துகொள்வோம். ஒரு துடியிடைக்கு அந்த வீணன் தூது போகிறவன் என்ற சூஷ்மத்தை. நமக்கு அவள் ஒரு மாது ; அவன் ஒரு வீணன் ; ஆனால் அந்த வீராதி வீரனுக்கோ, அவள் இன்பம்; அந்தவீணன் இன்ப புரிக்கு அவளை அழைத்துச் செல்பவன் ; எனவே இன்ப புரியில் குடியேறிய வீரன், யாரால் அந்த இன்பபுரி வாசம் தனக்குக் கிடைத்ததோ, அவனை வீணன் என்று எப்படிக் கருதுவான்! அவன் மற்றவர்களுக்கெல்லாம் வீணன்தான்! அவளுக்கு அப்படி அல்லவே! விலைமதிக்கொணாத இன்பத்தையன்றோ அவன் அந்த வீரன் பெறும்படி செய்தான், இந்த 'மர்மம்' சுலபத்திலே வெளிவரக் கூடியதல்ல. சொன்னாலும் பலர் நம்பமாட்டார்கள். ஆனால் இப்படிப்பட்ட ஏதாவது ஒரு மர்மம் இருந்தாலொழிய வீராதி வீரர் பலர், மிகச் சாமானியர்களிடம் அடங்கி நடப்பதன் இரகசியம் தெரிந்துகொள்ள முடியாது போய்விடும்.

* * *

வரலாற்றிலே, வேந்தர் பலர் சேடிகளிடமோ, சேனாதிபதிகளிடமோ, சிரித்த முகத்திடமோ கூரிய வாளிடமோ.

ஆசையாலோ பயத்தாலோ, அடங்கிவிட்டதற்கு ஆதாரம் இருக்கிறது. இவைகூட, ஆச்சர்யமில்லை. கூறிய வாளோ குளிர்மதிப் பார்வையோகூட இல்லாமல், நிமிர்ந்த பார்வையுடன் உள்ள ஒரு சிறு கூட்டத்திடம் மன்ருதி மன்னர்கள் மண்டியிட்டு இருக்கிருர்கள். மக்களின் சீற்றத்தைப்பற்றிக் கூட அவர்கள் அவ்வளவு அதிகமாகக் கவலைப்படமாட்டார்கள், அந்தச் சிறு கூட்டத்தின் சீற்றத்திடம் அவர்கள் மிகமிக அஞ்சுவார்கள். ஏனெனில், இந்த மக்களின் சீற்றத்தைக் கிளப்பவும், நிறுத்தவும் வேறு மன்னர்களின் விரோதத்தை ஏவவும், சிநேகத்தை வாங்கித் தரவும், அந்தக் கூட்டத்திஞல் முடியும். ஒரு புலிக்கு இருக்கும் வலுவை அளவிட்டுக்கொண்டு, அதற்குத் தகுந்தபடி, ஆயுத பலத்தைத் தேடிக் கொள்ளலாம். ஆஞல் பல புலிகளை ஏக காலத்திலே ஏவிவிடக் கூடிய காட்டரசனின் வலுவு எந்த அளவு என்று எப்படிக் கணக்கிட முடியும்? அதிலும் சுகபோகத்தையும்; சொந்த நலனையும் பாதுகாத்துக்கொள்வதிலே அக்கறை கொண்டுவிட்டால், அந்தச் சுகபோகத்தின் சுவையிலே இலயித்து விட்டால், அதனை இழக்கத் துளியும் மனம் வராத நிலையிலே, அந்தச் சுகபோகத்தை அழித்துவிடுவதற்கான சக்தியைப் பெற்றவரிடம், அடிமையாகித்தானே தீரவேண்டும். இரும்புப் பெட்டியில் உள்ள எண்பது இலட்சத்திலே ஆசை இருக்கும் வரையில், இடுப்பிலே தொங்கிய பெட்டிச் சாவியை பெற்ற மகனை விட அதிகப் பிரியமாகவும் ஜாக்கிரதையாகவும் கவனித்துக் கொள்வது சகஜம்தானே!

*　　　*　　　*

அரசே! அவந்திநாட்டு மன்னன், அழகில் மன்மதன் — அறிவில் பிரகஸ்பதி — செல்வத்தின் குபேரன் என்று எடுத்துச் சொல்லவும், "அவந்தி நாட்டுமன்னனுகை உள்ள

வன் அழிவின் சின்னம், அசுரபலம் அவனுக்கு, அக்கிர மமே அவனுக்கு அமிர்தம், அபலைகளை அழிப்பதே அவ னுக்கு ஆனந்தம்!" என்று கூறவும் முடியும். எவ்விதம் கூறினாலும் கேட்கவும் நம்பவும். நம்பிக்கையின் பலனாக அவந்தி நாட்டுக் காவலனை அழிப்பது அறச்செயலாகும் என்று துணியவும், வங்க கலிங்க காம்போஜம் முதலிய நாட்டு மன்னர்கள் தயாராக இருக்கிறார்கள் என்றால், இவ் வளவு மன்னர்களை ஏவும் நாவலிமை படைத்தவனை அவந்தி நாட்டவன், எப்படி அலட்சியமாகக் கருத முடி யும். அதிலும் இந்தச் செல்வாக்குப் படைத்தவன், தன்னைப் போல் ஒரு மன்னன் என்றால், பொறாமையால் தூண்டப் பட்டு இங்ஙனம் தூற்றுகிறான். பேராசையால் பிதற்றுகிறான் என்று கருதலாம். சொல்பவனோ சொர்ண சிம்மாசனத்தின் மீது இல்லை. கமண்டல மெடுத்துக் கொண்டு காடு சுற்றும் நிஷ்காம கர்மிக் கோலத்திலே காணப்படுகிறான்! சாந்தம் குடி கொண்ட மனம்! தேஜஸ் தவழும் முகம்! தவத்தால் இளைத்த தேகம்! நீண்ட ஜடை பற்று அற்ற நிலையைக் காட்டும் பார்வை! இவ்வித மான கோலத்திலே உள்ளவன் கூறும்போது, எப்படி அவனைப் பொறாமைக்காரன் என்றோ பேராசை பித்தன் என்றோ கூறமுடியும்? இவ்விதமான சிக்கலான நிலைமை யிலேதான் பண்டைய நாட்களிலே நமது மன்னாதிமன்னர் கள் மாவீரர்களைக் கொண்ட படைகளின் தலைவர்கள், "சிறு கூட்டத்திடம்" அடிமைப்பட்டனர்; அந்தப் பரம்பரை அடிமைத்தனம் இன்னும் போவதில்லை! முடியும் நம்மவர் சிரத்தினின்றும் போய்விட்டது. ஆனால், நம்மவர் அந்தச் சிறு கூட்டத்திடம் இன்று சிக்கிச் சீரழிந்தே வரு கின்றனர். தப்பும் மார்க்கம் தெரியாமலும் திகைக்கின்றனர்.

*　　*　　*

ஏசுநாதருக்கு அமோகமான செல்வாக்கு ஏற்பட்டது. அவருடைய வார்த்தை வேதமாகிவிட்டது. ஐரோப்பா வெங்கும் ஏசுவின் விசுவாசிகள் அவதரித்தனர். அவருடைய புகழ் எங்கும் அதிகமாயிற்று. ரோமாபுரி ராஜ்யாதிபதியிடம் தங்கக் கோபுரங்கள் அமைக்கப்பட்ட மாளிகைகள், தோல்வியறியாத துருப்புகள், தொகை தொகையாகத் துதி பாடகர்கள்! பவனிவந்தான், பராக்குக்காரர்கள் உடன் வர ! மக்கள் கண்டனர். களித்தனர், ஆனால் மறந்தனர் ; ஏசுவைப் புகழ மறக்கவில்லை : கோலாகலமாகக் கொலு வீற்றிருந்ததால், "பிரதானியர்கள் விருது பாடினர், ஆனால் நாட்டின் நாலுபாகங்களிலுமிருந்து வந்த ஒற்றர்கள் அங்கும் ஏசுவின் செல்வாக்கு ஓங்குவதைக் கூறினர். கொலு மண்டபத்திலே கிலி குடி புகுந்தது. ஏசுவின் சீடர்களிலே யூதாஸ் ஒருவன். மற்றவர்களுக்கு ஏசுவின் மொழி பரவுவது கண்டு மகிழ்ச்சி புதிய மார்க்கம் நிலைக்கிறது. சன்மார்க்கம் மேலோங்குகிறது என்பதால்! தாங்கள் போற்றும் இலட்சியம் நாடெங்கும் பரவுவது கண்டு, பேரானந்தம், யூதாசும் ஆனந்தப்பட்டான். ஆனால் வேறு காரணத்துக்காக மற்றவர்களுக்கு 'இஷ்டபூர்த்தி ' ஆயிற்றே என்ற திருப்தி யூதாசுக்கு, மகிழ்ச்சிதான். ஆனால் அடங்காத பசி, இனிமேல்தான் தன்னுடைய ஆசை ஈடேற வேண்டுமென்ற ஆவல். அவனும், மற்றச் சீடர்கள் போலவே, இரவு பகலாக ஏசுவுக்குத் தொண்டு செய்தான்— மற்றவர்கள், சன்மார்க்கம் தழைக்க வேண்டும் என்பதற்காக உழைத்தனர்—யூதாஸ், தன் குருதேவரின் புகழ் ஓங்கி, செல்வாக்கு வளர வேண்டும், பிறகு, அதனை ஆதாரமாகக் கொண்டு ஐரோம்பாவிலே. பெரியதோர் அரசு அமைக்க வேண்டும், என்ற நோக்கத்தோடு வேலை செய்தான், ஏசுவின் சொல் கேட்டு லட்சக்

கணக்கான மக்கள் எதையும் செய்வர் என்ற நிலை பிறந்ததும், யூதாஸ், ரோம் சாம்ராஜ்யத்தைவிட ரம்மியமானதோர் ராஜ்யத்தை அமைத்துவிட வேண்டும். ஏசுவுக்கு முடிசூட்ட வேண்டும் என்முன். அலெக்ஸாண்டர் படை பலத்தால் அரசு அமைத்தான், அரசர்கள் பலப்பலர் செய்துள்ளனர். அதுபோல குருதேவர் ஏசு, களம்புக வேண்டியதுமில்லை ; ஒரு வார்த்தை கூறினுல் போதும். ஐரோப்பாவின் ஏகச் சக்ராதிபதியாகிவிடலாம். அவ்வளவு அபாரமான செல்வாக்கு அவருக்கு உண்டு என்பதை யூதாஸ் அறிவான். அவன் எண்ணத்தையும் அறிவார். அறிந்தபோது சொன்னுர். “ என் ராஜ்யம் இந்த லோகத்திலே அல்ல ” என்று. பிறகு யூதாஸ் ஏசுவைக் காட்டிக் கொடுத்தான், ஏசு அரசு அமைக்க விரும்பவில்லை. காரணம், அவருடைய நோக்கம் அரசு அமைப்பதைவிட சிலாக்கியமானது தூய்மையானது அவர் நிரந்தர அரசு அமைத்துவிட்டார். பல அரசுகள் அவருடைய நிரந்தர ஆணைக்குத் தாமாக அடங்கி நடக்க முன்வந்தன. பிற் காலத்தில் யூதாஸ் நினைப்பிலே, இங்கு பல ஜடாதாரிகள் உலாவினர். அவர்கள் தத்தமது குருமாருக்குள்ளே அமோகமான செல்வாக்கைக் கண்டு ஏன் நமது குருதேவர் கொற்றவனுகக்கூடாது. ஏன் கோலாகால வாழ்வில் இருக்கலாகாது அரசுகள் கண்டு அஞ்சும் ஆற்றலைப் படைத்தும், ஏன் தாஞேர் அரசு அமைக்காதிருக்கிருர் என்று எண்ணி ஆத்திரப்பட்டதுண்டு. அந்தக் குருமார்கள் ஏசு சொன்னதுபோல “ என் ராஜ்யம் இந்தப் பூலோகத்தில் இல்லை” என்று ஞானுேபதேசம் செய்யவில்லை. எவ்வளவு பித்தம் இந்த சீடனுக்கு அரசு அமைக்காமலும், அமைத்த அரசு அழியாது பாதுகாக்க அல்லும் பகலும் பாடுபடவேண்டிய தொல்லை துளியு மின்றி, துக்க மின்றிக்

கிடந்து ராஜ்யத்தைக் கட்டிக் காவல் புரியும் பல காவலர்களை ஏவுலராகப் பெற்றுள்ள இந்நிலையைச் சாமான்யமென்று எண்ணுகிருனே இந்த ஏமாளி என்று எண்ணிச் சிரித்தனர். அந்தக் குருதேவர்கள் அரசுகள் அமைக்கவில்லை. ஆனுல் ஏசு சொன்னதுபோல, இந்த அரசு அல்ல என் இலட்சியம் என்று ஞான மார்க்கம் பேசவுமில்லை. அரசுகளை ஆட்டிவைத்தனர். காய்ச்சி வைத்தப் பாலைப் பருகினர். அதிலே கற்கண்டுபொடி குறைவு என்று குறை கூறிக்கொண்டு ! அரைத்து வைத்திருந்த சந்தனத்தை உடலெங்கும் அப்பிக்கொண்டனர். அரைத்த முறை அவ்வளவு சரியில்லை என்று கூறிக்கொண்டு, கோலம் துறவு தான்; ஆனுல், குறைவற்ற இன்பத்தைக் கேட்டுப் பெற்றனர். ஏசு ராஜ்யம் வேண்டேன். ஏனெனில் என் இலட்சியம் மனித சமாஜத்திலே தர்ம ராஜ்யம் ஏற்படுத்த வேண்டுமென்பதே என்ருர். இந்தக் குருதேவர்களும் ராஜ்யம் வேண்டாம் என்றனர். ராஜ்யம் கூடாது என்பதற்காக அல்ல. ராஜ்யாதிகாரிகள் நமக்குச் சேவை செய்யும்போது நாமே ராஜ்யம் அமைத்துச் சிரமப்படுவானேன் என்பதற்காக, பொது நலம் என் இலட்சியம். ஆகவே சுயநல நோக்கமாகிய இராஜபோகம் வேண்டேன் என்ருர் ஏசு ! இங்கே குருமார்கள் ராஜ்யம் வேண்டாம் என்று சொன்னது சுயநலம் கூடாது என்ற பெருநோக்கத்துடன் அல்ல. ராஜ்யத்தை ஆள்வதால் கிடைக்கக்கூடிய சுகத்தை அந்த ராஜ்யத்தை ஆள்வதற்காக எடுத்துக்கொள்ள வேண்டிய சிரமமுமின்றி அடைய வேண்டும் ' என்பதற்காக, விதைக்காது விளையும் கனி இருக்க, விதைத்தால் மட்டுமே விளையக் கூடிய கழனியை யார் விரும்புவர் ? இத்தகைய குருமார் கூட்டமே பண்டைய நாட்களிலே கொற்றவர்களை எல்லாம் இங்கே ஆட்டிப் படைத்திருக்

கிறது. அந்தச் சிறு கூட்டமே ஆரிய அதிகாரப்படி ரிஷிகள் ' தவசிகள் ' முனிவர்கள் என்று அழைக்கப்பட்டது.

அயோத்தியிலே அரசாண்ட தசரதன் தன் ராஜ்யத்தின் பாதுகாப்புக்காகப் பயங்கரமாகப் போர் புரிந்தான். மற்ற மன்னர்களும், ஆனால் வசிஷ்டன். தன்னுடைய குருஸ்தானத்துக்காகச் சிரமப்பட்டதில்லை. எந்தக் காரியத்துக்காகச் சிரமப்பட்டதில்லை, எந்த காரியத்துக்கும், வசிஷ்டரின் ஆலோசனை கோரப்பட்டது. அவ்வளவு நிலை, 'வசிஷ்டர் ' பெற்றது வாள் பலத்தாலா ? இல்லை ! அவருடைய நா அசைந்தால் எத்தனையோ நாட்டுப் படைகள், தசரதன் மீது போருக்குக் கிளம்பிவிடும் ! எந்த ராஜ்யத்திலும், அவர் 'குருஸ்தானம்' பெற முடியும். எந்த அரசனையும் தன் மொழி வழிக்கொண்டு செல்லமுடியும். ஆகையினாலே தான், அந்தச்சிறு கூட்டத்தைச் சார்ந்தவர்கள் அவசியமற்ற தொல்லை வேண்டாமென்று கருதி, அரசுகளை ஆளும் பொறுப்புள்ள காரியத்தைத் தாமே மேற்போட்டுக் கொள்ளாமல், மற்றவர்களை அந்தப் பொறுப்பு என்ற பாரத்தைச் சுமந்துகொள்ளச் செய்து அவர்களுக்குப் பக்கத்தில் இருந்துகொண்டு " அரசே ! இப்படிச் செய்வதே முறை ! இது தகாது !" என்று உபதேசித்துக் கொண்டும், எச்சரிக்கை செய்துகொண்டும் வாழ்ந்தனர். அரசர்கள் அரசுகளை ஆண்டனர். ஆரிய குருமார்கள். அரசர்களை ஆண்டு வந்தனர் ! இந்த முறை அயோத்தி அரசியல் மட்டுமா ? எங்கும் ! அந்நாள் மட்டுமா ? இந்நாளும் ! இப்போதும். திருவிதாங்கூரின் திவான்ஜீக்குத் திருப்புகழ் பாடும் அளவுக்கு மன்னருக்குப் பாடுகிறார்களே ! திவானுடைய திருக்கல்யாண குணங்களைப் பாராட்டுகிற அளவுக்கு, மன்னருக்கு உண்டா ?

மன்னரும் இருக்கிற பெருமைகளில் ஒன்ருகவன்ரே, மதி யூகியும் வீராருமான சச்சிவோத்தமர் சர். ஸி. பி. இராம சாமி ஐயரைத் திவாஞகக் கொண்டிருக்கிருர் என்ற செய்தி கூறப்படுகிறது. இந்த சூக்ஷ்மம், அந்த நாள் தொட்டுத் தெரியும் அந்தச் சிறு கூட்டத்துக்கு. ஆகவேதான், அன்று முதலே, அரசர்களாகி விடுவதைவிட, அரசர்களை ஆட்டி வைப்பது மேல் என்ற தந்திரத்தைக் கையாண்டார். அரண்மனை வாசியைத் தாசனுக்கிக் கொள்வது யுத்தம் என்று கருதினர். முக்கனி தேடி அலேவதைவிட, தனித் தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்ருகக் கூட்டித் தருவ தற்குத் தக்கதோர் சீடனைப் பெற்று விடுவது அல்லல் இல்லாத ஆனந்த மல்லவா ? அது அவர்களுக்குத் தெரி யும். அந்த நாட்களிலே, ஆஸ்ரமங்களிலே, யூதாஸ் போல இருந்த சந்தேகிகளின் எண்ணத்தைக் குருமார்கள் எப்படிப் போக்கினர் என்பதைச் சிந்தித்தும் பார்த்தால் தெரிந்து கொள்ளலாம்.

கங்கைக்கரை! ஆங்கோர் ஆஸ்ரமம் ! பிரவாகத்தின் சத்தம். அதனுடன் போட்டியிடுவது போன்ற வேதவுரு மற்ருேர்புறம் ! இயற்கை எழில், புள்ளிமான் துள்ளி விளே யாடுகிறது ! குயிலின் கீதம், மயிலின் நடனம் ! மரக் கிளைகளெல்லாம் மதுரத்தைப் பொழிந்து கொண்டு வித விதமான பட்சிகள் ஒரு சிறு பரிவாரம் வேதத்தைப் பாராயணம் செய்துகொண்டு, அவர்களுக்கு ஒரு குரு இகத்தில் லயிக்காமல் பரத்தைப் பற்றிய எண்ணத்தில் ஈடுபட்டனர். அவர் உடலில் பொன்னுபரணமோ, சிரத்தில் மணி முடியோ கிடையாது. ஆஸ்ரமத்தருகே இரதகஜ, துரக, பதாதிகள் கிடையாது. சீடர்களிடம் வாள் வேல் கிடையாது, உடலிலே தழும்பு கிடையாது! உள்ளத்

திலேயோ, உலகின் முதல்வனை உணரவேண்டும், அதற்கு என்ன வழி என்பதன்றி வேறு கவலை கிடையாது. அதே நேரத்தில், டில்லியில் மகோன்னதமான மாளிகை, அதற் கருகே பாசறை, அங்கே போர் பயிற்சியிலே ஈடுபட்ட பல்லாயிரவர்! அவர்கள் உடலில் தழும்புகள், மாளிகைக் குள்ளே மன்னன்! அவன் முன் பல்வேறு நாட்டு ஒற்றர் கள். அவர்களிடம் தத்தமது பார்வையிலே விடப்பட்ட பிரதேசங்களிலே உள்ள பூபதிகளின் படைப்பலம், நோக் கும், நிலைமை ஆகிய தகவல்களைத்தரும் ஓலைகள்! இந்த இரு இடங்களிலே எங்கு இருந்தவருக்குச் சுகம்? ஆஸ்ரமத்தின்மீது ஆஸ்ரமம் படை எடுக்காது! சதுர்க் கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு அரண்மனை யைத் தரைமட்டமாக்க அதே சமயத்திலே, வேறோர் அரண்மனை சதியாலோசனை மண்டபமாக மாறி இருக்கும்! ஆஸ்ரம வாழ்வு, அரண்மனை வாழ்வு இரண்டிலே எது விதைக்காது விளையும் கழனி?

கங்கைக்கரையிலே, (கங்குபட்டர்) காகபட்டர் என்ற குரு கொலுவீற்றிருக்கிறார் ஆஸ்ரமத்தில்! அவருக்குக் கவலை ஏது? டில்லியிலே அதே போழ்து அவுரங்கசீப் இருக்கிறார். அரண்மனையிலே அவருக்கு எவ்வளவு அல்லல், தொல்லை, ராஜகிரியில் ஒரு அரண்மனை. அதைச் சுற்றிலும் அசகாய சூரர்கள், அவர்களின் தலைவர் சிவாஜி. அவர் அரண்மனைக்குள்ளே இருக்கிறார். அவருடைய நினைப்பு முழுவதும் அவுரங்கசீப்பின் படைப்பலத்தின்மீது! அவுரங்கசீப்பின் எண்ணம் யாவும் மலர்ந்த மராட்டியம் டில்லிவரை பரவுகிறதே என்பதே பற்றி! இரு இடங்களி லும் இருந்த படை வீரர்களின் பேச்சு, இன்னின்ன போலே இன்னின்ன ஆபத்துக்கள், இப்படி இப்படித் தப்பினோம் என்பது பற்றி கண்ணிழந்த தம்பி, கை இழந்த அண்ணன்,

காலிழந்த மாமன், உயிரையே இழந்த உத்தமர்கள் இவர்களைப் பற்றியே பேச்சு, நடந்த சண்டைகள், இடிந்த கோட்டைகள், ஒடிந்த உள்ளங்கள், அழிந்த குடும்பங்கள், ஓடிய இரத்த வெள்ளம் ; இவை பற்றிய உரையாடல் மட்டுமா ? இனி வர இருக்கும் இன்னல், மூள இருக்கும் போர். அதிலே ஏற்பட இருக்கும் ஆபத்து, இவை பற்றியும் பேச்சு. ஓயாத தொல்லை! தீராத கவலை; ததும்பு நிரம்பிய சடலம்! இவை அரண்மனைகளிலே ஆஸ்ரமங்களிலே எரியாத அகில், தேயாத சந்தனம் இருக்கக் கூடும். புரியாத மந்திரங்களை உச்சரிக்கும் மதி நிறையாத சீடர்கள் உலவக்கூடும்! வாழ்க்கையின் வேதனையோ, மாற்றானின் விரோதமோ இராது. அது மகிழ்ச்சி மாளிகை! அரண்மனையோ மனதை மருட்டும் இடம்! எனவேதான் கங்குபட்டர் டில்லியிலே இருந்த அவுரங்க சீப்பைப் போலவோ, ராஜகிரியில் இருந்த சிவாஜியைப் போலவோ மணிமுடி தரித்துக் கொள்ளும் மன்னனாக இருக்கும் தொல்லையான பதவியைத் தேடவில்லை. மாறாக மணிமுடி தன்முன் மண்டியிடச் செய்தார் !

" குருதேவா ! குதிரை வீரர்கள் யாரோ வருவது தெரிகிறதே !"

"வரட்டுமே! இங்கே எந்தக் கோட்டை இருக்கிறது ; அவர்கள் தாக்க பிடிக்க போரிடுவதற்கு இதுவா இடம் ? இது பூஜா மடம்! இங்கே வருபவன் பூஜைக்கு வருவான்: வேறு காரியத்திற்கு இதுவா இடம் !"

" எந்த நாட்டவரோ ?"

" யாராக இருந்தால் என்ன? நாம் என்ன ஒரு நாட்டுக்கு அரசரா, மற்ற நாடுகளைப் பற்றி சந்தேகிக்கவோ, பயப்படவோ?" சஞ்சலப்படும் சீடனைத் தேற்றிவிட்டு,

குரு சாவதானமாகத் தன் காரியத்தைப் பார்க்கிறார். குதிரை வீரர்கள் ஆசிரமத்துக்குக் கொஞ்சம் தொலைவிலேயே குதிரைகளை விட்டுக் கீழே இறங்கி பயபக்தியுடன் நடந்து வருகிறார்கள். குதிரைகளை மரத்திலேயே கட்டி விட்டு, ஆசிரமத்துக்குள் நுழைந்து, கங்குபட்டர் முன் வணங்கிப் பணிவுடன் கூறுகிறார்கள் ; " குருதேவா ! தாங்கள் தயை கூர்ந்து ராஜகிரி எழுந்தருள வேண்டும். மராட்டிய வீரர் சிவாஜி தங்கள் தரிசனத்துக்காகவும் தங்கள் யோசனையை ஒரு முக்கியமான விஷயமாகக் கேட்கவும் ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறார் " என்று கூறுகின்றனர். இந்த நிலையில் அரண்மனையில் அரசனாக வேண்டும் என்ற எண்ணம் உப்புச்சப்பற்றது என்று யாருக்குத்தான் தோன்றுது ! மாவீரன் சிவாஜி. மராட்டியத்தின் மாணிக்கம். மொகலாய சாம்ராஜ்யமே அவன் பெயரைக் கேட்டு கொஞ்சம் நடுங்குகிறது. அவன் தன் வாள் பலத்தால் ஒரு அரசு அமைத்திக்கிறான். அவனுடைய கட்டளையை எதிர்பார்த்து இலட்சக்கணக்காணவர்கள் உள்ளனர். அவன் பொருட்டு களத்திலே உயிரைவிட்டவர் பல்லாயிரவர். மராட்டியம் மனைதோறும் ஓர் மாவீரனைத் தந்தது. அப்படிப்பட்ட சிவாஜி, அழைக்கிறார் கங்கு பட்டரை, " தரிசனம் தருக! யோசனை அருளுக!" என்று. அவருடைய வேண்டுகோளைத் தாங்கிக் கொண்டு வீரர் இருவர் வந்துள்ளனர். வெற்றிக்களை முகத்தில் வீச, அது சமயம் கங்குபட்டர் தமது சீடர்களைப் பார்த்திருக்க மாட்டாரா ? அந்தப் பார்வையின் பொருள் என்ன? " எதற் கடா மண்டுகளே ! நமக்கு அரசு ? அரசாள்பவன் நமது அடி பணியச் சித்தமாயிருக்கும்போது நான் ஏன் அரசமைக்க வேண்டும் " என்பது தானே ?

" என்னடா, இது, தவளை மாதிரி கத்திண்டிருக்கே?"

" யஜுர் !"

" எந்தச் சனியனுவது இருக்கட்டும்! மனதிற்குள்ளே சொல்லிக் கொள்ளேன். மகாபெரிய ஞானஸ்தராகப் போகிறுரோ? அப்படித்தான் பிரகஸ்பதி ஆகிவிடுவ தாகவே வைத்துக்கொள், என்ன பலனைக் காணப்போகி ருய்? ஆஹா ஊ ஹுன்னு கூவினதுதான் மிச்சம் வா ! கொஞ்சநேரம் கங்கைக் கரையிலே போய் விசாந்தியாய் உலாவிக்கொண்டிருப்போம்; "சரி வா ! போவோம். நேக்கும் கொஞ்சம் தலையை வலிக்கிறது" இதுபோல் சீடர்கள் பேசியிருப்பர். கங்கைக் கரையிலே உலாவும் போது, உலக விவகாரங்கள், ஊர் ஏளனம், பல்வேறு நாட்டு நடவடிக்கைகள் பற்றி பேசிக்கொண்டிருக்கும் போது, அவர்களுக்கு அரண்மனைகள் அங்கு வாழ்வுக் குஷி இருப்பது முதலியனபற்றிய நினைப்பு வரத்தானே செய்யும் ! "சாமான்யர்களெல்லாம் எவ்வளவு சம்பத் துடன் வாழ்கிரு, அவர்களுக்குச் சகலமுந் தெரியாது. அவாளெல்லாம் அரண்மனைகளிலே வாசஞ் செய்கிரு. நந்தவனங்களிலே உலாவிண்டு அப்சரசு போன்ற ஸ்தீரி ரத்தினங்களோடு சரசமாடிண்டு, சௌக்கியமா, உல் லாசமா காலங்கழிக்கிரு" என்று கூறிப் பெருமூச்சு விடு வார் ஒரு சீடர். 'ஆம் ! அதனுலென்னடா? அதற்குத் தான் ராஜபோகம்னு பேர்!' என்று மற்றவன் பதில் கூறு வான். சஞ்சலப்படும் ரங்குவை கங்குபட்டரிடமே இழுத்து விட்டு விடுகிருன் என்று வைத்துக்கொள்வோம். உரை யாடல் எப்படியிருக்கும் கங்குபட்டர் தன் சீடன் அசட ஞக இருப்பதைக்கண்டு பரிதாபப்பட்டு அவனுக்கு விளக்கம் பிறக்க உபதேசிப்பார்.

கங்கு : டே ரங்கு ! என்னடா இது அரண்மனையிலே வாழ்கிருளே, அப்சரசுகளே உலாவுகிருளே என்று ஏதேதோ பேசிக்கொண்டிருந்தாயாமே ?

ரங்கு : இல்லை ஸ்வாமி! ராஜாதி ராஜாக்கள் அனுபவிக்கும் போகமிருக்கே, அதைப்பற்றி அடியேன் ..

கங்கு : ஆமாய் ராஜபோகம்னே அதற்குப் பெயர் இருக்க! விளக்கம் எவ்வளவு கூறினேம்? அரச போகத்திலே ஆசை கொண்ட சீடனுக்குத் திருப்தி ஏற்படாது ; ஆகவே, அரசபோகத்தைவிட ஆசிரியருக்குள்ள யோகம் சிலாக்யம் என்பதை நடவடிக்கையிலே காட்ட வேண்டும் என்று எண்ணிய கங்குபட்டர், "அசடே ! உன் சந்தேகத்தைப் போக்குகிறேன் ராஜகிரி நகரிலே!" என்று கூறிவிட்டு அழைத்துச் சென்றிருப்பார்.

கங்கைக் கரையிலே இருந்தவர்கள் அரசர்களை அடிபணியச் செய்யும் நிலையில் இருக்கும்போது அவர்கள் ராஜகிரியில் அரண்மனையில் உலாவும் அரசராகப் பிறக்கவில்லையே ; அல்லது அரசன் ஆகவில்லையே என்று கவலைப்படக் காரணம் உண்டா? நமது வார்த்தையை ஆசீர்வாதத்தை ! கட்டளையை – எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர் —சிவாஜி. நாம் இஷ்டப்பட்டால் மட்டுமே அரியாசனம் ஏற முடியும். அவனிடம் அரசு இருக்கிறது. அரசைக் காப்பாற்றிக் கொள்ளும் ஆற்றலும் இருக்கிறது! இருந்தும் 'நான் யார் ஒரு ஆரியன் ! அசகாய சூரன் ! வாள் உண்டு அவனிடம். ஆனல், என் வார்த்தை அவனுக்குக் கிடைத்தால்தான் அவன் மன்னனுக முடியும்!' என்று அந்த ஆரியன் எண்ணுதிருப்பாளு? எண்ணும்போது அவன் உள்ளத்திலே எவ்வளவு ஆனந்தம்-ஏன்?

ஆணவம் பிறந்திருக்கும்! ஆற்றங்கரையிலே ஆரியன் உலாவும் அதே நேரத்தில் அரண்மனையிலே உலாவும் சிவாஜியின் மனதிலே எவ்வளவு சோகம்-சஞ்சலம் சந்தேகம் பிறந்திருக்கும். ',அவர் என் சொல்கிறரோ — ஆசீர்வதிப்பாரோ - முடியாது என்று கூறிவிடுவாரோ'' என்று எண்ணிக் கவலையில் மூழ்கியிருப்பான். இவன் சிரத்திலே முடி இருக்கும் ஆரியன் அனுமதித்தால், இந்த நிலை கிடைக்கும்போது ஆரியன் ஏன் அரசப் பதவியை அலட்சியமாகக் கருதமாட்டார்கள்?

" பாரடா மண்டு, பார்! பார்! நமக்கு நடக்கும் இந்த ராஜோபசாரத்தை! ராஜகிரியில் யார் இப்போது உண்மையான ராஜா! என் முன்பு வீழ்ந்து வணங்குபவன் ஒவ்வொருவனும் அசகாய சூரன், யுத்தத்திலே ஜெய வீரன், எதிரிக்கு மார்காட்டத் தயங்காத தீரன், ஆனல், இவர்களின் தலைவன் இனி நமக்குச் சீடன்!'' என்று ராஜகிரியிலே வரவேற்கப்பட்ட வைபவத்தின்போது ஆரியக்குரு எண்ணுமலிருப்பானு ! வீராதி வீரனுனலும் வேதியருக்கு அடங்கியே தீரவேண்டும், என்ற வேத நீதியை வேதியர் புகுத்திய நியதியை, வரணுஸ்ரம முறையை, சனுதனச் சட்டத்தை, அந்தச் சமயம் அவர் போற்ருது இருந்திருப்பாரா? அந்தச் சட்டமல்லவா ஆஸ்ரம வாசியை அரண்மனைக்கே அதிகாரியை நியமிக்கும் உயர்தர அதிகாரியாக்கி வைத்தது, படைவீரனும் இராஜியை படைபலம் அற்றவனிடம் பணியவைத்தது. வாள் ஏந்திர வீரனைத் தன் தாள் பணியச் செய்தது மனுவின் மகிமையால் அல்லவா, மண்டலாதிபதி மண்டியிடுகிருன் என்று எண்ணி அந்த மறையோன் மகிழ்ந்திருப்பான். "அசடே! அரசு வேண்டும். அரசனுக வேண்டும் என்று அற்பத்தைத் தேடாதே. அரசுகளை ஆட்டிவைக்கும் அதிகாரம்

நம்மவரிடம் இருக்கும் வழியை நாடு அதற்கான புராதன இதிகாசாதிகளைப் பரப்பு ! மக்களை அவைகளிலே நம்பிக்கைக் கொள்ளும்படி செய்! அரசர்கள் பிறகு உன் அடிமைகள்! அரசபோகத்தை அடையலாம். அதற்கான பொறுப்பும் உன்னை அண்டாது. ஆரியனே ! அரசனாக வேண்டும் என்று ஆசைப்படாதே அரசன் ஆரியதாசனாக வேண்டும் என்று ஆசைப்படு. அதற்காக வேத புராண இதிகாசாதிகளைப் பரப்பும் காரியத்தை விடாமல் செய்!" என்று கங்கு பட்டர் தமது சீடர்களுக்குக் கூறுது இருப்பாரா? அவ்வளவு நாட்களுக்கு முன்பு இருந்தவரின் எண்ணம் கிடக்கட்டும் நமது கண்முன் உள்ள ஆச்சாரியார், இப்போது கூறுகிறாரே, "பிராமணர்கள் தங்கள் குடும்பத்திலேயே கட்டாயம் ஒரு பிள்ளையை வேதம் படிக்க அனுப்பிவிட வேண்டும்" என்று ஏன் கூறுகிறார் அதுபோல்? அவருக்குத் தெரியும் ஆரியம் விதைக்காது விளையும் கழனி என்று!!

# வேமன்ன

மூட நம்பிக்கையை எதிர்த்து, நடத்தப்பட்ட புரட்சி. கலைத்துறையிலே, அடிக்கடி நடைபெற்றிருக்கிறது. ஆந்திர நாட்டிலே அதற்கு அடிபணிய மறுத்து, சிந்தனைச் சுதந்திரத்துக்குப் பாடுபட்ட பெரியோர்களில் வேமன்ன மிக முக்கியமானவர், அவர், மதத் தரகர்களின் மாயாவாதத்தைக் கேட்க மதி மயங்கியவர்களின் ஏமாளித்தனத்தையும், கண்டித்தார். ஜாதி மத பேதத்தைச் சாடினார், சமரச கீதத்தையும் பாடினார். புரட்சி அவருக்கு அப்படி! அச்சமின்றி இவைகளைக் கண்டித்தார். மதத்தின் பெயர் கூறிக்கொண்டு சடங்கு, சாஸ்திரம், சம்பிரதாயம் என்று பழமையை பிடித்துக்கொண்டு, பாழ்படும்பாமர மக்களைத் தட்டி எழுப்ப எளிய இனிய, கவிதைகளைப் பொழிந்தார்.

"இன்ன அவதாரமெடுத்தவனே ! இவ்வளவு உயரம் இருப்போனே ! இரண்டு மனைவிகள் உடையவனே! மலையைத் தூக்கியவனே! மாடு ஏறினேனே!" என்ற முறையிலே, கடவுளின் உருவம், திருவிளையாடல். ஆகியவற்றையே, பாடலாகக் கேட்டு மக்களுக்கு, வேமன்னவின் பாட்டுக்கள் வெடிகுண்டுகள் போலிருந்தன. உண்மையிலேயே, வேமன்னவின் பாடல்களின் போக்கு, மூடக் கொள்கை கோட்டைகளைத் தாக்கித் தகர்த்திடும் வெடி குண்டுகள் தான் ! அவருடைய கவிதைகள், கடவுளைக் குறித்துக் கபடர்கள் கட்டிவிட்ட மட்டரகமான கதைகளைக் குப்பைமேட்டுக்குக் கொண்டு சென்றன ! தொழுது கிடந்தவர்களை, அவர் தமது கவிகளைப்பாடி, மூடக் கொள்கைகளின் புரட்டை விளக்கி, மக்கள் விடுதலை

அடையச் செய்தார். அவருடைய கவிதைகளிலே அறிவு மணமும் புரட்சித் தீயும் கலந்து இருந்தன. அவ்வளவுடன் அகராதியைத் துணைக்கொண்டோ, புலவர்களிடம் பாடம் கேட்டோ மட்டுமே புரிந்து கொள்ளக் கூடியதான, கடின நடையாக அமையாமல், படித்ததும் பாமரரும் எளிதில் உணர்ந்து கொள்ளக் கூடிய நடையாக இருந்தது. எனவே வேமன்னுவின் கவிதை, புலவர்களின் பூசலுக்கேற்ற ஏடாகவோ, பூஜை அறைக்குகந்த நூலாகவோ, பய னற்றுப் போகாமல் சாதாரண மக்களுக்கும் பயன்படக் கூடிய, சத்துள்ள ஏடாயிற்று. பூசி மெழுகுவதும், புறங் கூறிப் பார்ப்பதும் பல பொருளுக்கு இடமிருக்கச் செய் வதன் மூலம், உண்மைப் பொருளை மறைப்பதுமான வேலையை வேமன்னு வெறுத்தார். மனதிலே பட்டதை வெட்டொன்று துண்டு இரண்டென வெளியிட்டார். வெகுண்டனர் பழமை வாதிகள். பாமரரோ பயன் பெற் றனர், விடுதலை வீரனும் வேமன்னுவின் கவிதை நுழை யாத வீடில்லை! அவருடைய வாதத்தை மறுத்துரைக்க எந்தப் புலவருக்கும் துணிவில்லை! தன்மானத்தீயைப் பரப்பிக் கொண்டிருந்தார், மெய்யறிவொளி மன்னன், வேமன்னு.

உரிமைப்போர் உணர்ச்சி மிகுந்து, விடுதலை வேட்கை அதிகரித்து, எதையும் ஆராய்ந்தறிய வேண்டுமென்ற ஆர் வம் மிகுந்திருக்கும் இந்நாளிலே, நாம் மிகச் சுலபமாக ', ஜாதி இல்லை! மதபேதம் ஒரு தொல்லை ! கடவுள் பேரைக் கூறி சிலர் ஏய்ப்பர். கேளாதீர் அவர் சொல்லை ! பிறப்பினுல் உயர்வு தாழ்வு இல்லை " என்று கூறிவிடுகி ருேம். பழமையைக் குட்டுகிருேம். இன்னும் சிலர் நமது பிரசார வேகத்தைக் கண்டு, பீதி கொள்கின்றனர். மக்க ளின் மனம் புண்ணுகும் என்று சொல்கின்றனர்,

"மெள்ளச் சொல்லு, கொஞ்சம் கொஞ்சமாகச் சொல்லு" என்று நிதானம் பேசச் செய்கின்றனர். இன்னும் சிலர் "எப்படி அந்த காலப் பெரியவர்களின் முறைகளை கண்டிக்கலாம்? இன்று நேற்று ஏற்பட்டதா, அந்த முறை?" என்று பழமைக்குப் பரிந்து பேசுகின்றனர்.

வேமன்னு 500 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர் அந்த நாளிலே அவர். இன்று நாம் கூறும் புரட்சி உரைகளை, அஞ்சாது அயராது எதுக்கு. கூறினர் என்பதை நாம் அறியும் போது, நாம் ஆச்சரியப் படுகிறோம். அவர் எவ்வளவு பெரிய வீரர் என்பதை உணர்ந்து வியப்படைகிறோம். விஜய நகர சமஸ்தானதிபதிகளால் ; வளர்க்கப் பட்டு மத ஆதிக்க மூட பக்தி ஆந்திரத்திலே கொழுத்ததை வரலாற்றிலே காணலாம். அப்படிப்பட்ட ஆந்திரத்திலே ஒரு வேமன்னு தோன்றி அஞ்சா நெஞ்சினராக நின்று மூலக்கொள்கைகளைக் கண்டித்தா ரென்றால், அது வெறும், 'விவேகி" என்ற பட்டத்தை மட்டுமல்ல, "வீரர்" என்ற விருதையும், வேமன்னு பெற யோக்கிதையுள்ளவர் என்பதே விளங்குகிறது. பேச்சுத் சுதந்திரமும் எழுத்துச் சுதந்திரமும் அணியாக உள்ள அரசு இதுபோது உண்டு. அன்றோ அப்படி யில்லை. மூடநம்பிக்கையை காரசாரமாகக் கவி பாடிக் கறவறுக்கக் கடும் போரிட்டார் வேமன்னு.

அவர் கொண்ட வீடு, அரச குடும்பத்தவர் வழித் தோன்றல் என்றும், ரெட்டியார் வகுப்பென்றும், இளமையிலேயே மெய்யறிவுப் பிரசாரத்திலே ஈடுபட்டுத் துறவியாகி, குண்டூர் மாவட்டப் பகுதியிலும் மற்றைய இடங்களிலும் வாழ்ந்தார் என்பதன்றி விரிவான வரலாறு கிடைக்காமல் போய்விட்டது. கர்ண பரம்பரைக் கதைகள் உண்டு. ஆனல் குறிப்பான வரலாறு இல்லை. அவரைத் தெரிந்து

கொள்ள வரலாறு இல்லையே என்பது பற்றிய கவலை தேவையில்லை. ஏனெனின் அவருடைய கவிதைகள், நமக்கு அவரை நன்கு காட்டுகின்றன, ஏறக்குறைய 300 கவிதைகள் மிஞ்சியுள்ளன.

" இருட்டறை தன்னிலே இட்ட கல்லை
எட்ட நின்று பூசை செய்யும் மட்டிகளே!
உள்ளிருக்கும் நாதன் தன்னை உணராதது ஏனோ?"

என்று கேட்கிறார் வேமன்னா! இருட்டறை கோவில். அதிலே இட்டகல். சாமி! இதைத் தொழுதவர் அறிவிலிகள்! ஏன்? ஆண்டவனுக்குக் கோயில், வெளியே இல்லை; உள்ளமே அவனுக்கு உறைவிடம்! இது வேமன்னாவின் கவிதை! ஒவ்வொரு கோயிலுக்கு எத்தனை "மகத்துவங்கள்" கற்பிக்கப் பட்டிருக்கின்றன! இதை நம்பிக்கொண்டு எத்தனை பேர் "யாத்திரை" போகிறார்கள்! இதனால், பரம்பரையாக எவ்வளவு பேர் பிழைக்கின்றனர்! இந்தப் பிழைப்பின் வாயிலே, மண் போடுமல்லவா, வேமன்னா சதகம்!

"அட! முட்டாளே! அங்கே போய்க் கல்லைக் கும்பிடுவானேன்? ஆண்டவன் தான் உன் உள்ளத்தில் இருக்கிறானே !—என்று கேட்கும்போது, அது பாமர மக்களின் மனதிலே பாய்கிறது. முதலிலே கொஞ்சம் யோசிக்கத் தொடங்கியதும், 'ஆமாம்! வேமன்னா சொன்னது உண்மை தான் !' என்று உணருவர், அத்தகைய உயர்ந்த கவிதை அவருடையது.

பல தெய்வ வணக்கத்தையும், ஜாதி பேதத்தையும் வேமன்னா கண்டித்துப் பாடியுள்ளவைகளிலே, ஒரு சிலவற்றைக் கீழே பொறித்துள்ளோம். படித்து இன்பம் பெறுக.

மூடக்கொள்கைக்கு எதிர்ப்புணர்ச்சி ஆந்திரத்திலே இருக்கிறது. இன்றும் இருக்கிறது. 'வேமன்ன வாழ்ந்த நாட்டிலே ஈரோட்டு விதை' எளிதில் பலன் தரும்! எள்ள ளவும் சந்தேகம் வேண்டாம். காவி அணிந்தவர்களைக் கண்டால் இன்று, சர்வ சாதாரணமாகக் கேலி செய்யு மளவு, மக்களிடை மதி மலர்ந்திருக்கிறது என்ற போதிலும் "என்னமோ யார் கண்டார்கள்! என்னமோ சித்து விளை யாடக் கூடியவராக இருக்கவும் கூடும்! போகாசனத்திலே நிபுணராக இருப்பர்" என்று, பாமரர் மனதிலே, ஒரு சபலம் தட்டுவதும் இருக்கிறது. இப்படிப்பட்ட மக்கள் வேமன்னவின் காலத்திலே, இன்று இருப்பதைவிட எவ்வளவோ அதிகமான அளவு காவியிடம் மதிப்பு வைத் திருப்பர் வேமன்ன, அந்தக் காலத்திலே காவி வேடதாரி களைக் கண்டித்திருக்கும் பாடல்கள் பல! நிரம்ப நெஞ்சமுத் தம் இருந்திருக்க வேண்டுமல்லவா? அதற்கு! வேமன்ன வீசும் வெடிகுண்டுகளைப் பாருங்கள்.

'பரிவுடன் நீரில் மூழ்கிப் பட்டையாய் நாமம் சாற்றி
அரியநற் காவியாடை யன்புடன் பூண்டு நன்றே
அரிசனம் உடலிற் பூசும் அறிவையர் வதனங்கண்டால்
உரமிலாராகித் தான்கொள் உறுதியும் இழப்பர் வேமா.'

மனக்கண்முன் வருகிறனல்லவா. பட்டை நாமம் பூச்சுக்காரன்! அவனுடைய சேட்டையைத்தான் கேட்டி ருப்பீர்களே. பாருங்களேன் மேலும். அவன் வேமன்ன விடம் சிக்கிப் படுகிறபாடு எப்படியிருக்கிறது என்று.

"காவி சேராடை தன்னைக் கண்ணியமுடனே பூண்டு
மேவிய யோகி போன்று மேதினி தன்னிற்றேன்றி
பாலிய ஆசை என்னும் பற்றற்றுத் திரிகின்றேனே
தாவிலா தோங்கும் கள்ளச் சன்யாசி யாவன் வேமா".

சுமைதாங்கிகளே ! – என்று கேலி செய்கிறார். காவி உடையினரை ! கேளுங்கள் இந்தப் பாட்டை.

"புத்தகம் சடையும் தண்டம்
புலியின்தோல் கமண்டலத்தை
இத்தரை யோர்கள் காண
ஏற்றமாய்ச் சுமப்பர் என்றும்
சுத்தம் உள்ளத்தில் இன்றிச்சுமந்து
இவைதிரியின் மேலாம்
முத்தியிற் கூடல் உண்டோ
முன்னிடின் இவர்கள் வேமா"

விடுகிறாரா இத்தோடு! இல்லை, அந்தச் சுமைதாங்கிகளைப் பிடித்திழுத்து வந்து, நம் முன் நிற்கவைத்து அவர்களின் மொட்டைத் தலையிலே குட்டுகிறார். பாருங்கள் வேடிக்கையை !

"காட்டினில் இலைகள் தின்றும்
காஷாயம் மெய்யில் பூண்டும்
நாட்டமாய் தலையில் மொட்டை
நலமெனச் செய்தும் என்ன ?
ஏட்டையாய் மொட்டை செய்யின்
எண்ணங்கள் மொட்டையாமோ ?
வேட்டலை அகற்றின் மேன்மை
மேவிடும் மேலோய் வேமா !"

"சுமை தாங்கியே! இதென்ன கோலம்? ஏன் காஷாயம் தரித்தாய்? ஏன் மொட்டை அடித்துக் கொண்டாய்?" என்ற கேள்விக்கு, மொட்டைச்சாமி என்ன பதிலளிப்பான்! "மோட்சம் போக இக்கோலம்கொண்டேன்" என்று கூறுவான், வேமன்னு, "தலையை மொட்டை அடித்துக்

கொண்டாரியே தவிர, ஆசையை விட்டாயா? அலைகிருயே அலையும் மனதை அடக்கக் கற்றுக்கொண்டாயா? இச்சை யற்ருல் மேன்மை வந்து சேருமே! இப்படி மழுங்க மொட்டை அடித்துப் பயன் என்ன?'' என்று கேட்கிருர். பரிதாபம்! அந்த வேடக்காரன் என்ன பதில் கூறமுடியும்! 'சாயம் வெளுக்கவே சங்கரா' என்றுதான் அழவேண்டும்!

''உடலினில் நீறு பூசிச் சடைகளை
புனையி னும்தன்
உடையனும் பரனைக் காணும் உரிமையை
எய்தான் எய்தான்
கடலினைக் கொண்டும் சாத்தின்
பலம் உறும் கதவு அதுவாமோ
திடமுறின் சிந்தை தன்னில் சீருறப்
பெறலாம் வேமா!''

''மனதை அழுக்கேறச் செய்யாதே! திட மனது பெறு அதுதான் சீருற வழி, இந்த வேடமல்ல,'' என்று உப தேசிக்கிருர், அந்த உண்மை யுணராது காவி பூண்ட வர்க்கு.

அத்தகைய காவி வேடதாரிகளுடன் சேராதீர் என்று மக்களுக்கு வேமன்ன மதி புகட்டுகிருர்.

''சாமியார் எனக் கூறிக்கொள்ளும் வேடதாரிகள் சிலர்
திரமிலாச் செல்வம் தன்னைத் திரமென மனதில் எண்ணி
உரமிலா மனிதர் தம்பால் உறுபொருள் பறிப்பர் இந்த
தரமிலா மோசம் செய்யும் சழக்கரை சாரேல் வேமா''

காணிக்கை கேட்கும் சாமியார்களும், பாத பூஜை செய்து 'பிச்சை' இடும் சீடர்களும் கேட்கவேண்டும் இப் பாடலை.

மக்களிடம் பணம் கேட்பர், அந்தச் சாமியார்கள் ! எப்படிப்பட்ட மக்களிடம்? உரமிலா மனிதரிடம், மன வலிவில்லாத மாந்தரிடம், பணம் எப்படிப்பட்டது ? உர மில்லாதது ! பாழான பணத்தை பாமரரிடமிருந்து பறிப் பர், சாமியார்கள் என்று கூறிக்கொள்பவர்கள். அவர் களை வேமன்ன கடிந்துரைப்பதைக் கேளுங்கள். ஆண்டி வேடம் பூண்டு, அகப்பட்டவரிடம் பொருள் பறிக்கும் அவர்கள் வேமன்னவிடம் வெகு பாடுபடுகிறார்கள்! "இந்த கையவர்களிடம் சேராதே!" என்று வேமன்ன மக்களுக் குப் புத்தி புகட்டுகிறார்.

தீர்த்த யாத்திரை போவது. மூர்த்தி ஸ்தலங்களை தரிசிப்பது. என்ற வழக்கத்தை வேமன்ன சாடுகிறார் பலமாக. இவைகளால் ஒரு பலனுமில்லை. என்று விளக்கு கிறார். மோட்சம் போக அது மார்க்கமல்ல என்று இடித் துரைக்கிறார். பாருங்கள் பாட்டை.

"காசியும் மதுரை தானும் காஞ்சியும் கயை பிரயாகை
பேசிடும் அயோத்தி தானும் பிறங்கிடும் சேதுதானும்
நேசமாய் உடலின் உள்ளே நிலவிய தன்மை பாரார்
ஆசையாய் நதிகள் தேடி அலைவதுஏன் மாந்தர்வேமா"

உருவ வழிபாட்டை வேமன்ன உரமாகக் கண்டிக் கிறார். "கல்லாலான உருவத்தை கடவுளென்று தொழு கிறாயே. என்ன மதி இது ?" என்று கேட்கிறார், நை யாண்டி செய்கிறார்.

"சிலைதனைக் கொண்டு மாந்தர் சீருறக் கோயிற்கட்டி
சிலைதனை வேறென்று உள்ளே சிவன் எதுத்தெரியவைத்து
சிலைதனைச் சேவை செய்யின் சிறந்திடும் பலன் என் காண்பர்,
சிலைதனைவிட்டு உன்னுட் சிவனைத் தேடாதோர் வேமா!"

" கற்களைக்கொண்டு வந்து சின்ன பின்ன மாக்கி
சிற்பிசெய் திட்ட பிம்பம் சிறந்ததாய் கோயி லுள்ளே
பொற்புற நாட்டி என்றும் போற்றிடு மனித ருற்ற
சற்குணம் என்னவென்று சொல்லுவேன் வேம மேலோய்"

சிலைதனைப் பதுமை செய்து செகத்துள்ளோர் புகழவைத்து
அலகிலா பூசை செய்வோர் அறிவிலா மாந்தர் இந்த
உலகுறும் பிராணிதன்னில் உண்மையாய் சிவனும் நிற்க
அலைதல் ஏன் பிராணி தன்னில் அன்புறுது இவர்கள்வேமா

என்றெல்லாம் கேட்கிறார். அவசியமற்ற அர்தமற்ற காரியத்திலே ஈடுபடும் மக்கள் அறநெறி அறியாதிருப்பது கண்டு வெகுண்ட வேமன்னு.

" கறவனற் கோயிற்சென்றுங் கவலை புரித லன்றித்
திரமுறும் புத்தி கொண்டு தேவனைப் பாரான் "

என்றும் எச்சரிக்கிறார்.

இங்ஙனம் விவேகமற்று வீணாட்டத்திலே மக்கள் ஈடு பட்டு பாழ்படுவதன் காரணம் என்ன என்று வேமன்னு சிந்திக்காமல் போகவில்லை. " தீர்த்தமாடினால் திரு அருள் கிடைக்கும். யாத்திரை செய்தால் மோட்சம் கிடைக்கும். கோயிலிலே சென்று உருவ வழிபாடு செய்தால் கோரிய பலன் கிடைக்கும்." என்றெல்லாம் பாமர மக்களை பூசுரர் தூண்டி விட்டதாலேயே, மாந்தர் இந்த மயக்கத்தில் வீழ்ந்தனர் என்பதைக் கண்டறிந்து அத்தகையவர்களைக் கண்டித்திருக்கிறார்.

" பதியினில் பலரும் கூடிப்பல மந்திரங் கூறி வாழ்த்தி
சதிபதி என்ன உள்ளம் சம்மதத்தாலே சால
விதிதனை அறிந்து சேர்க்க விதவையாய் போவதென்னே ?
மதியினலாயின் இது மாமோசமாகும் வேமா "

விதியின் போக்கை உணர்ந்தவர்கள் என்று கூறிக் கொண்டு திருமணத்துக்குப் பொருத்தம் பார்த்து வைக்கிறார்களே, அவர்கள் ஜாதகம் பார்த்து ஏற்பாடு செய்கின்ற கலியாணம், செய்துகொண்டவர்களிலே எவ்வளவோ பேர் விதவைகளாகி விடுகிறார்களே, ஏன் என்று எண்ணிப் பார், ஆராய்ந்து பார்த்தால் இது மகாமோசம் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்;" என்பது மேலே உள்ள பாடலின் கருத்து.

பாடுபடும் குலத்தைப் பழிப்பவர்களைவிட உழைக்கும் இனமே மேலானது என்று கூறுகிறார். அம்மட்டோ! தீண்டாதார் என்று ஓர் கூட்டத்தினரைக் கூறிக்கொடுமை செய்வதைக் கண்டு மனம் நொந்து வேறு பாடல்களைப் பாடுகிறார்.

" ஏற்றத் தாழ்வு என்று உள்ளத்தில் எண்ணி
எந்நாளும் தக்க
ஏற்றத் தாழ்வு என்று உள்ளத்தில் எண்ணி
தூற்றுவார் பறையா கிட்டேல் 'தூரப்போ' என்று பாரில்
சாற்றிடின் இவர்கள் நன்மை சார்வரோ, வேம மேலோய் "

" பறையரைக் கண்டு கண்டு பல நிந்தை சொல்வ தென்ன?
முறையறும் இந்த வார்த்தை மொழிகின்ற மாந்தர் தாமும்
பறையரும் ஒன்றே யாவர், பண்போடும் இவர்
உள்ளத்தில்
உறைதலோடு ஒளிந்து நின்று உரைப்பவன் வேமா "

யாவரும் ஒன்று என்ற கொள்கையைக் கூறுவதோடு நிறுத்தவில்லை.

வேமன்னு உயர்குல உரிமை பேசியவர்களைத் தாக்கியபோது ஆச்சரியமாகத்தான் இருந்திருக்கும். ஆனால்

வேமன்ன. தன் வார்த்தையை, ஆராய்ந்து பாராது, அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறவில்லை. " யார் எதைச் சொன்னலும் கேட்கும் தலையாட்டியாக வேண்டாம். ஆர அமர யோசித்துப்பார். அறிவை துணைக்கு அழை " என்றும் நயவுரை கூறினர். கேளுங்கள் இந்தக் கவிதையை.

" கேட்டிடு பலர் எதைச் செப்பினும்
கேட்ட உடனே துரிதம் கொளேல், கேள் விபரங்கள்
கேட்டு அதன் விபரம் அறித்ததன்
கேட்குதல் எவன், அவனே மனிதன் கேட்டியோ வேம "

" மனிதன் சிந்தித்து முடிவுக்கு வரவேண்டும், சந்தேகம் இருந்தால் தெளிவு கேட்கவேண்டும். இவர் கூறுவதைக் கேட்கக் கூடாது. அவர் சொல்வதைக் கேட்கக் கூடாது என்று எண்ணலாகாது. 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் காண்பது அறிவு' என்பதுணரவேண்டும். கோல்முன் கூத்தாடும் குரங்கு. அங்கு சத்துக்கு அடங்கும் யானை. கடிவாளத்திற்கு கட்டுப்படும் குதிரை. கயிற்றுக்கு அடங்கும் எருது, எலும்புத் துண்டுக்கு அடிமைபடும் நாய் மிருகங்களின் சுபாவம். ஆசை பயம் இரண்டிலே எதிலேனும் ஒன்றுக்குக் கட்டுப் பட்டுக் கிடப்பது; பகுத்தறிவு கிடையாமையால் ! மனிதா நீயும் அப்படி இராதே ; சிந்தித்துப்பார், ஆராய்ந்து முடிவு செய்!" என்று அறிவுறுத்தினர் வீர வேமன்ன.

# குரலப்பர் மாறிவிட்டார்!

"சேட் கங்காராம் பெரிய மோசக்காரன்—ஊர் சொத்தை அடித்து உலையில் போட்டுக் கொள்கிறன்—கசக்கிப் பிழிந்து காசு திரட்டுகிறன்—நமது கரும்புக் கொல்லையில் தன் காளையை விட்டு மேயவைத்துப் பாழாக்குகிறன். நமது தோட்டத்து அரும்புகளைக் காலால் மிதித்து அழிக்கிறன்-கனி குலுங்கும் தோட்டத்திலே கடுவனை ஏவுகிறன்-சேச்சே! அவனுடைய அக்கிரமத்துக்கு ஒரு அளவே இல்லை! அவனுடைய ஆதிக்கத்துக்கு, அட்டகாசத்துக்கு நாம் ஆட்பட்டிருக்கவேண்டும், நம்மவர்களிடம், சேட்கங்காராமுடைய கெடுமதியை எடுத்துச்சொல்லி அவர்களுக்கு ரோஷமும் மானமும் ஏற்படச் செய்ய வேண்டும். இதிலே காலதாமதமே கூடாது, காரியம் அடியோடு கெட்டு விடுவதற்குள் நாம் கடமையைச் செய்தாக வேண்டும்."

எனக்குக் களிப்பு சொல்லி முடியாது, ஏனெனில் சேட் கங்காராமின் கொட்டம் அடக்கப்பட வேண்டும் என்பதிலே எனக்கு ஏற்கனவே ஆர்வம் கொழுந்துவிட்டெறிந்து கொண்டிருந்தது, என்னைப்போலவே எண்ணுவதுடன், என்னைவிட மிகுதியாக ஆர்வம் காட்டி, அனைவருக்கும் எழுச்சியூட்டும் முறையில் வீரம் பேசிட, கூவம் குரலப்பன் வந்தது களிப்பு கண்டதால், ஏற்படாமலிருக்குமா!

சேட் கங்காராமுக்கும் கூவம் குரலப்பனுக்கும் நேசமும் பாசமும் அதிகம் என்று எண்ணிக் கொண்டிருந்தால்

நம்முடன் கூடிப் பணியாற்ற குரலப்பன் வரமாட்டார் என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் இந்த ஆர்வ மூட்டும் பேச்சு எழும்பியது; சுவையுள்ள பேச்சு, பயன் மிகுதியும் ஏற்படும் என்றுதான் நம்பினேன்.

களத்தூரானும் கூவம் குரலப்பனும் ஒன்றுகூடி விட் டார்கள். இனி ராட்டினம் ராஜப்பன் மட்டுந்தான் சேட் கங்காராமுக்குத் துணை—என்று பலரும் பேசினர்.

சேட் கங்காராமின் கொட்டம் அடக்கப்பட வேண்டிய அவசர அவசியத்தை விளக்க, கூவம் குரலப்பனுடன் நான் கூட்டுப் பணியாற்றி வந்தேன். நாட்கள் உருண் டோடின, களத்தூரான் சொல்லுவதைத் தான் குரலப்ப னும் சொல்லுகிறார்—இத்தனைக்கும் குரலப்பன், சேட் கங்காரமுடன் பல காலம் பழகியவர்தான்!-இருவரும் சேர்ந்து இப்போது சேட் கங்காராமின் குட்டு உடைக் கிறார் என்று அனைவரும் பேசிக் கொண்டனர்.

நான் சேட் கங்காராமின் ஆதிக்கம் ஒழிய வேண்டும் என்று சொல்லுவேன்-போதாது! நண்பர் களத்தூரான் சொல்லுவது போதாது–ஆதிக்கம் மட்டுமல்ல, சேட் கங்காராமே இங்கிருந்து ஒழியவேண்டும் என்று குரலப்பர் முழக்கமிடுவார், எனக்கு ஒரே குதூகலம்.

சேட் கங்காராம் கூடக் கலங்கிப் போனார் என்று கேள்வி.

இந்த களத்தூரான் தான், ரொம்ப நாளாக என்னை எதிர்த்துப் பேசுகிறான்-என்னிடம் சிரித்துப் பேசிவந்தான் குரலப்பன். இந்த ஆசாமியு மல்லவா, களத்தூரானுடன் கூடிக் கொண்டான், போறாத வேளை!-முணுமுணுத்துக் கொண்டானும் சேட்.

சேட் கங்காராமை மட்டுமல்ல, என்னுடன் கூடிக் கொண்டு குரலப்பர், கோயிலூரான் கொடுமை, மடத்தூரா ரின் மடமை இவைகளை எல்லாம் கண்டித்துப் பேசுவார்.

இங்ஙனம் இருந்துவந்த குரலப்பர், திடீரென்று ஒரு நாள், 'சேட் கங்காராமைக் கண்டித்துப் பேசுவது வீண் அனுவசியமாகக் குரோதம் மூட்டும் காரியமாகும். சேட் கங்காராம் அக்கிரமம் செய்கிறுர் என்று கதைக்கும் களத் தூரான், கோவையான், கோங்கூரான் கொல்லத்தான் ஆகியோரின் 'குரலாம்' - ஆமாம் குப்புறப்படுத்தும் கூறு வேன்' - என்று பேச ஆரம்பித்தார். நான் திகைத்துப் போனேன்.

குரலப்பரின் இந்த மன மாறுதலுக்குக் காரணம் புரிய வில்லை.

சேட் கங்காராமின் சேட்டைகள் அப்படியே இருந் தன, சொல்லப் போனுல், வளர்ந்து வந்தன. எனினும் குரலப்பரின் பேச்சும் அடியோடு மாறிவிட்டது.

கோயிலூர் மீது கோபித்துக் கொண்டு இந்த களத் தூர்க் கும்பல் காட்டூர் செல்கிறுர்கள்-என்ருர்.

மடத்தூரானிடம் மல்லுக்கு நிற்கும் இந்த மாபாவி கள், வேற்றூரானிடம் சேர்ந்து கொண்டார்கள் என்ருர். எனக்கு என்ன காரணம் இந்த மாறுதலுக்கு என்பதே புரியவில்லை ; திகைத்துப் போனேன்.

களத்தூரானும் குரலப்பனும் பிரிந்துவிட்டார்கள் என்று முப்புரியானும், சேட்டும் பேசிக் கேலி செய்தனர் .. கைக் கொட்டிச் சிரித்தார்.

சில நாள் திகைப்பு இருந்தது-பிறகு சரி. இடையே கிடைத்த உதவி, இம்மட்டும்தான் நிலைத்தது. இனி நமது வேலையைத் தொடர்ந்து நாம் செய்ய வேண்டியது தான் என்று உறுதிகொண்டேன்-பணியில் ஈடுபட்டு வரலானேன்.

சேட் கங்காராமை எதிர்த்து ஒழிக்கவேண்டும் என்று முழக்கமிட்டுவந்த குரலப்பன், மாறி விட்டதற்கான காரணம் மெள்ள மெள்ளத் தான்தெரிந்தது.

சேட் கங்காராமை பலரும் எதிர்க்கிருர்கள்-பத்தோடு பதினென்ருக இருந்து கொண்டு, நாமும் எதிர்த்தால் நாம் வெளியே தெரிவது எப்படி ! ஆகவே, சேட்டுடன் கூடிக் கொள்வோம்-அப்போது பலருடைய பார்வையிலும் 'பளிச்' செனப் படலாம் என்பது ஒரு காரணம் !

மற்ருென்று சேட் கங்காராம் தன்னுடைய கொல்லைக் காவல் வேலைக்குக் குரலப்பரையே நியமித்து விட்டார்.

கொல்லைக் காவல் வேலை என்பது வெளியே தெரியாமலிருக்க வேண்டும் என்பதற்காக குரலப்பர், 'எல்லைக் காவல்' என் வேலை என்று சொல்லிக்கொண்டு வருகிருர்.

எல்லை எதுவாஞலும் எனக்கென்ன, என் கொல்லைக்கு குரலப்பர் காவல் இருக்கிருர்-தொல்லை விட்டது என்று சேட் கங்காராம் நம்பிக் கொண்டிருக்கிருர்-காவல் கடும்புயலாவது தெரியாமல்.

குறிப்பு :- குறும்பென்றும் தெரியவில்லை, புத்தி கூர்மையென்றும் தெரியவில்லை, ஆபீஸ் சிறுவன் இதையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறுகிருன்.

" முதலாளித்துவத்தின் சுரண்டற் கருவிகளான பாங்குகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள், கப்பல் தொழில். ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவைகளில் கூட வடநாட்டு மூலதனம் முற்றுகையிட்டுள்ளது. தமிழகத்தின் பெரிய பெரிய தொழில்கள், வாணிகம் ஆகியவற்றில் மட்டுமின் றிச் சினிமா, சிற்றுண்டிச் சாலை, நகைக்கடை, கடிகாரக் கடை, செருப்புக்கடை, உடைக்கடை போன்ற சின்னச் சின்ன வாணிப நிலையங்களைக்கூட, வடநாட்டார் நடத்தி வருகின்றனர். தமிழன் என்ற உணர்ச்சியோடு சென்னை 'சீன' பசாரில் ஒருமுறை சுற்றிப் பார்த்தால், இந்த உண்மை விளங்கும் ; அப்போது ஆத்திரத்தால் நமது செந்நீர் கொதிக்கும் ; துக்கத்தால் கண்ணீர் பெருகும். இதனுல்தான் நாம் வடநாட்டு ஆதிக்கம் ஒழியவேண்டும் என்கிறோம்" - தமிழ் முரசு.

இதற்கும் நான் எழுதியதற்கும் என்னடா சம்பந்தம் பயலே! என்று நான் கேட்கிறேன்.

' வேலைக்கு ஒருவிதமாக மாறி விடுபவர்களைப் பற்றி வேடிக்கை கதை எழுதினீர்களே! இதோ நிஜமாகவே ஒரு சம்பவம். ம. பொ. சி. யின் முன்னுள் கருத்து அவருடைய முரசு இதழில் இருப்பது. இன்று அவருடைய கருத்துத்தான் தெரியுமே நமக்கு. ஆகவேதான் இதைக் கொடுத்தேன் ' என்கிருன்.

# பாரதி பாதை

எட்டயாபுரத்திலே, தேசீயக்கவி சுப்பிரமணிய பாரதியாருக்கு, அழகிய மண்டபம் அமைத்துச் சீரிய முறையில் விழா நடத்தினர்.

பரங்கியாட்சியை ஒழித்தாக வேண்டுமென்ற ஆர்வத் தீ கொழுந்துவிட்டெரியும் உள்ளத்துடன் வாழ்ந்தவர் பாரதியார். தாயகத்தில் உலவத் துரைத்தனத்தார் தடை விதித்ததால், புதுவையில் தங்கிப் புதுப்பாதை வகுத்தார் பாரதியார்.

அவருக்குக் 'காணிக்கை' செலுத்த ஆட்சி அலுப்பையும் பொருட்படுத்தாது, ஆச்சாரியார் வந்தார் - ஆயிரக் கணக்கான தமிழர்கள் கூடினர் - இசைவாணர்கள் - கலைவாணர்கள் - எழுத்தாளர்கள் பற்பலர்.

'கல்கி' ஆசிரியர் இப்பணியினைத் திறம்பட நடத்தி முடித்தார். விழாச் சொற்பொழிவுகளில், நாவலர் பாரதியார், சிவஞானக் கிராமணியார் ஜீவானந்தம், நாமக்கல்லார், எழுத்தாளர் சங்கத் தலைவர் பெ. தூரன் ஆகிய பலரும் கலந்து கொண்டனர்.

நண்பர் சிவஞானம் பெருமிதத்துடன் கூறினார், ''அதிகாரமற்ற கரம் அஸ்திவாரக்கல் நாட்டுகிறதே என்று முன்பு ஆயாசப்பட்டேன். இன்றோ, ஆளும் கரம், மணி மண்டபத்தைத் திறந்து வைத்தது கண்டு அகமகிழ்கிறேன்'' என்று. உண்மை, வங்கமாளும் ஆச்சாரியார்

மணிமண்டபத்தைத் திறந்தார். வறுமையாளராகக் கவனிப் பாரற்று, நாடுகடத்தப்பட்டு, நலிவுற்றிருந்த பாரதியாருக்கு நாடு முழுவதும் கொண்டாடும் அளவினதான விழா நடந் தேறியது.

பாரதியாரின் கவிதைத் திறன். அதனாலய பயன் மறுக்க முடியாதன. பாரதியாரின் தனிப் பண்புகளை, அவரை அந்நாளில் அறிந்தவர்கள் கூறிடக் கேட்டால், புது உலகு காண விழைபவர்களின் அகமெல்லாம் மகிழும். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், பாரதியாரைக் குறித்துப் பேச ஆரம்பித்தால், அவர்களுடைய கண்களில் ஓர் புத் தொளி தோன்றிடக் காணலாம்.

பாரதியாரின் காலம் வேறு; இக்காலம் வேறு. எனவே இன்றுள்ள எண்ணங்களை எல்லாம் அவர் அன்றே ஆய்ந் தறிந்து கூறியிருக்க வேண்டுமென்றோ, நாம் எடுத்துரைப் பதும், வரலாற்று உண்மையான ஆரிய திராவிடப் பிரச் சினையை அவர் கூறியிருக்க வேண்டுமென்றோ நாம் எதிர் பார்ப்பதற்கில்லை. அவருடைய பாடல்களிலே பல இடங் களில் அவர், ஆரியர் என்ற சொல்லை உயர்த்தியேதான் பாடி இருக்கிறார். அந்தக் காலம் நாமெல்லாம் பள்ளிகளில் 'ஆரிய மத உபாக்கியானம்' எனும் ஏட்டினைப் பாடமாகப் படித்த காலம், நம் தலைவர், தமிழ் நாட்டுக் காங்கிரசிலே பெருந் தலைவராக இருந்த காலம்.

ஆரியர் - திராவிடர் பிரச்சினை, ஓர் ஆராய்ச்சி- வர லாறு. இதனை நாம் பாரதியாரிடம் காண்பதற்கில்லை.

ஆரியம் என்பது, ஓர் வகைக் கலாச்சாரம்—வாழ்க்கை முறை.

திராவிடம், அதுபோன்றே. தனியானதோர் வாழ்க்கை முறை.

இது இன்று விளக்கமாகப் படுவதுபோல, பாரதி யாரின் நாட்களில் கிடையாது.

பல ஜாதி - பல தெய்வ வணக்கம்-பற்பல விதமான மூட நம்பிக்கைகள்-தெய்வத்தின் பெயர் கூறித் தேசத்தின் பொருளைப் பாழாக்கும் கேடு-இவைதாம் ஆரியம் !

'ஒன்றே குலம்,ஒருவனே தேவன்' இது திராவிடம்.

இரண்டிலே எது நல்லது? எந்தக் கலாச்சாரத்துக்கு நீர் ஆதரவு தருவீர்? என்று பாரதியாரைக் கேட்க, யாருக் கும் வாய்ப்பில்லை. கேட்டிருந்தால், நிச்சயமாக அவர் திரா விடக் கலாச்சாரத்தையே விரும்பியிருப்பார், அவருடைய பாடல்களில் - பிற்காலப் பகுதிகளில் - இந்தச் சூழ்நிலை இருக்கக் காணலாம்.

பாரதியார் விஷயத்தில் பகுத்தறிவாளர்களுக்குள்ள மதிப்பு, முதலில், பரம்பரை வழக்கப்படி அவர் தேவியின் வரப்பிரசாதம் பெற்றதாலோ, முனிவர் அருளாலோ, பஞ் சாட்சர உபதேசப் பலனாலோ, பாட ஆரம்பித்தார் என்று அருட்கவியாக்காது விட்டார்களே, அதுதான்.

நாமகளைத் துதித்தார் - நாலைந்து ஆண்டு - பயன் இல்லை. பிறகோர் நாள், 'அம்மே! இனி நான் உயிர் வாழேன்' என்று கூறி, நாவை அறுத்துக் கொள்ளக் கிளம்பினர்; உடனே களுக்கென ஓர் சிரிப்பொலி கேட் டது. அம்மை பிரசன்னமாகி, 'பாலகா! பாடு!' என்றாள்.

உடனே அவர் பாடலானூர் - பாடினூர், பாடினூர், பார் முழுதும் பாடல் பரவும்வரை பாடினூர் என்று, பாரதியார் புராணம் காட்டாதவரையில், நமக்கெல்லாம் மிகக் களிப்பு; நமக்கு களிப்பு என்பது மட்டுமல்ல, பாரதியாருக்கே உண்மையில் பெருமை, அவர் நாமகள் பூமகள் அல்லது வேறோர் தேவனின் அருள் பெற்றவரல்ல. அவர் ஓர் கவி, சிந்தனையில் பட்டதை செந்தமிழில் கவிதையாக்கினவர் என்பதனுல்தான்.

கூடுமானவரையில், பாரதி விழாச் சொற்பொழிவாளர்கள் அவருடைய அருமை பெருமைகளை எடுத்துரைக்கையில், 'புராணம்' பேசாதிருந்ததுபற்றி நாம் மகிழ்கிறேம். அன்பு ஆசிரியர் மட்டும், பாரதியாரை, ஓர் 'முனிவர்; என்று கூறினூர். ஆனுல் அதற்கும் அவர் வழக்கமான பொருள் கூறத் துணியார்.

பாரதியாருக்குள்ள பெருமை, முதலில் இது. மற்ரோர் பெருமை, அவர் தம்முடைய நாட்களிலே, மற்றவர்களைவிட வேகமாக முன்னேற்றக் கருத்துக்களைப் பாடி, அதன் பயனுக அவருடைய சமூகத்தாராலே வெறுக்கப்பட்டு "பார்ப்பன மேதைகள்" என்போரால் அலட்சியப்படுத்தப் பட்டு, வறுமையில் வாடி, அன்னிய ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு ஆளாகி, அல்லலை அனுபவித்து, அந்த அல்லலால் மனம் உடையாமல், நோக்கம் மாருமல் அரைக்க அரைக்க மணக்கும் சந்தணமானுரே, அந்தப் பண்பு.

அவருடைய பண்பு, ஜாதிக் கட்டுகளை உடைத்தெறியக் கூடியதாக இருந்தது என்பது, அவருடைய கவிதைகளிலே, பல ரகமான இடங்களில் தெரிகிறது.

அவருடைய நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் அந்த நாட்களில் நையாண்டி செய்யப்பட்டது! இன்று, அவருக்கு மகாகவி என்ற பட்டம் தரவும் பளிங்கு மண்டபம் கட்டவும் தமிழகம் முன்வந்தது ! கவிஞரைப் போற்றும் மாண்புக்கும் அதைக் கவர்ச்சிகரமான முறையிலே நடத்திக் காட்டிய கல்கியின் திறமைக்கும், நமது பாராட்டுதல்.

', பாரதி மண்டபத்தை, விழாவுக்காகப் போடப்பட்ட பந்தல் மறைத்துக்கொண்டிருக்கிறது '' என்று ஆச்சாரியார் பேசினர்.

மண்டபத்தைப் பந்தல் மறைக்கிறது !

மண்டபத்தை மட்டுமல்ல ! தேசியக் கவிதைகள் என்ற ஒரு பகுதியை மட்டுமே பெரியதாக்கி நாட்டிலே பரப்பிக் காட்டுவதால் பாரதியாரின் முழு உருவம், மக்களின் கண்களுக்குத் தெரியவொட்டாதபடி மறைக்கப் படுகிறது !

பாரதியார் தோத்திரப் பாடல்கள் பல பாடினர். ஆனல் தேவார திருவாசகமும். திருவாய் மொழியும், பாடியான பிறகு பாடினர். எனவே அவருடைய கவிதைகளிலே, தோத்திரப் பகுதி முக்கியமோ, அவருடைய பெருமைக்குச் சான்றோ ஆகாது. வைதீகர்களின் நோக்கத்தின்படியேகூட.

பாரதியார், வேதாந்தப் பாடல்கள் பல பாடியுள்ளார். ஆனல் அவருக்கு முன்னர்த் தாயுமானரும் வள்ளலாரும் பாடிவிட்டனர். எனவே, அந்தப் பகுதியும் பழம் பதிப்புப்போன்றதுதான்.

அவருடைய நாட்டுப் பற்றுப் பாடலே, அவருடைய கவிதைகளில் மிக முக்கியமான—மற்றக் கவிகள் பாடாத காலத்திற்கேற்ற பலன் அளித்த பகுதி.

விடுதலைப் போர், புரிய அவருடைய கவிதைகள் தக்க கருவியாயின. எனவேதான் வெள்ளையன் வெளி யேறிய விழாவுக்கு அடுத்ததாக, பாரதி மண்டபத் திறப்பு விழா நடைபெற்றது.

ஆச்சாரியார் சொன்னார், "அன்னிய ஆட்சியை எதிர்த்து இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பல கவிகள் பாடல்கள் இயற்றினர். தமிழர்களுக்கு தமிழ்க்கவிதானே பயன்பட முடியும்? பாரதியார் அந்த வகையிலே தமிழ ருக்குப் பயன்பட்டார்" என்று.

ஆகவே, பாரதியாரின் பக்திப் பாடல் வேதாந்தப் பாடல் இவைகளைவிட, நாட்டுப்பற்றுப் பாடலே மகத் தான பலன் தந்தது; விழாக் கொண்டாடின அன்பர்கள் இந்த பகுதியைத்தான் விளக்கினார்கள் விஸ்தாரமாக. மதுரை முஸ்லீம் தோழர் ஒருவர், "பாரதியாரின் பாடல் ஆங்கிலேயரை ஓட்டிய அணுகுண்டு" என்று கூறினார். தமிழகத்திலே காங்கிரசின் வெற்றிக்குப் பாரதியார் பாடல் மிகமிகத் தாராளமாகப் பயன்பட்டது. பயன்படுத்திக் கொண்டு பாராளும் அளவு உயர்ந்த பலர், பாரதியாரை ஏதோ ஓர் சமயத்திலே மட்டும் எண்ணுவதுடன் இருந்த னர். இக்குறையைப் போக்கி கவிஞரின் நினைவுக் குறி யாக ஓர் அழகிய மண்டபத்தை அமைத்தார் கல்கி.

ஆச்சாரியார் சொன்னரே பந்தல் மண்டபத்தை மறைக்கிறது என்று. அதுபோல, பாரதியாரின் தேசீயப் பாடல்களை மட்டுமே பரப்பிய காரணத்தால், நாட்டவருக் குப் பாரதியாரின் முழு உருவமும் தெரியவில்லை! இனி யாவது தெரியுமா என்றால், தெரியச் செய்தாலொழியத் தெரிவதற்கில்லை என்றே கூறலாம்.

" ஆடுவோமே பள்ளு பாடுவோமே !"
" வந்தேமாதரம் என்போம் "
" செந்தமிழ் நாடென்னும் போதினிலே "
" தாயின் மணிக்கொடி பாரீர் "
" ஜெய ஜெய பாரத "

இப்படிப்பட்ட பல தேசீயப் பாடல்களை, நாட்டு மக்களின் செவிக்கும் சிந்தனைக்கும் கொண்டுவந்துள்ளார் பாரதியார். அவ்வளவுதானு? பாரதியாரின் முழு உருவம், அதுவல்ல! அடிமை நிலை போகவேண்டும் என்ற கோப நிலையில் உள்ள பாரதி அது. ஆனல், அதைத் தாண்டி, நாட்டு உள் நிலை, மக்கள் மன நிலை இவைகளைக் கண்டு மனம் நொந்து வேதனைப்படும் பாரதி இருக்கிருர் ! மக்களின் மந்த மதியினைக் கண்டு, அவர்களைத் திருத்த வேண்டும் என்ற ஆவல் கொண்டு, துடிக்கும் பாரதியார் இருக்கிருர். நாடு எப்படி எப்படி இருக்க வேண்டும்? சமூகம் எவ்வண்ணம் அமைய வேண்டும்? என்ற இலட்சியம் கூறும் பாரதியார் இருக்கிருர் ! தேசீயப் பாரதியின்உருவம் இத்தனை பாரதிகளை மறைக்கிறது, ஆச்சாரியார், பந்தல் மண்டபத்தை மறைக்கிறது என்று கூறினரே அதுபோல !

பெரிய பந்தல் விழாவுக்காக. மண்டபமோ கவியின் பெருமைக்குரிய சின்னம். விழா முடிந்ததும் பந்தலைப் பிரித்து விடுவார்கள்-மண்டபம் நின்று அழகளிக்கும். அது போல், பாரதியாரின் 'தேசீயக் கவிதை' அன்னியரை ஓட்டும் அரும்பணிக்காக மட்டுமே அமைவது. அந்தக் காரியம் முடிந்தால், இனி அந்தப் பந்தலுக்கு அவசிய மில்லை. அவசியமில்லாததால் அது எடுபடும். அது எடு பட்ட பிறகுதான். பாரதியாரின் மனம் தெரியும். பாரதியாரின் முழு உருவம் தெரிய, அவருடைய கவிதா சக்தியின் முழுப் பயனையும் பெற, அப்போதுதான் முடியும்.

இனியும் மேடைகளில் ஏறி, 'தாயின் மணிக்கொடி பாரீர்' போன்ற தேச பக்திப் பாடல்களை மட்டுமே பாடிப் பயனில்லை.

தாயின் மணிக்கொடி பார்க்கிறோம்; இங்கே காயும் வயிற்றையும் காண்பீர் என்று, மக்கள் முழக்கமிடுவர்! எனவே, எந்தப் பகுதியை மட்டும் அதிகமாகப் போற்றி நாட்டுக்கு எடுத்துரைத்து வந்தார்களோ, அந்தத் தேசீயப் பாடல் பகுதிக்குள்ள பயனும், ஜொலிப்பும் இனி இராது! ஆகவே, பாரதி பயன் இல்லையா? அல்ல, அல்ல! பய னுள்ள பகுதி, பலரறியாப் பாரதி! மறைக்கப்பட்ட பாரதி இனிதான் மக்களுக்குத் தெரியவேண்டும். தேசீயக்கவிக்கு அப்பால் நிற்கிறார் அந்தப் பாரதி! அந்தப் பாரதி ஆங்கி லேயனை ஆரியப் பூமியிலிருந்து விரட்டும் பாரதிமட்டு மல்ல! நாட்டைவிட்டு கேட்டினை எல்லாம் ஓட்ட வேண்டு மென்று, கூறும் பாரதி! மேடைகளிலே இதுவரை நிறுத் தப்படாத பாரதி! தேசபக்தர்களின் நாவிலே நின்று இது வரை நர்த்தனமாடாத பாரதி! மறைந்திருக்கிறார். பொன்னு லான பெட்டிக்குள் முத்துமாலை இருப்பது போல! அந்தப் பாரதியை நாம் அறிமுகப்படுத்தினால், விழாக் கொண் டாடியவர்களிலேயே பலருக்கு முகமும் அகமும் சுருங்கக் கூடும். ஆனால், அந்தப் பாரதி, நெடுநாட்களுக்கு மறைந் திருக்க முடியாது. வெளிவந்தாலோ, இன்று அவரை புகழ வந்திருக்கும் பலரே, நிந்திக்கக்கூடும்! இதோ அந்தப் பாரதி - பந்தலால் மறைக்கப்பட்டுள்ள மண்டபம்!

பண்டைப் பெருமை - பழங்கால மகிமை—அந்த நாள் சிறப்பு - என்றெல்றாம் பேசுகிறார்களே, அவர்களை நாம் எவ்வளவோ கௌரவமாகத் தானே கேட்கிறோம். 'ஐயா! பழைய காலத்தைக் கட்டிப் பிடித்தழுகிறீரே, இது சரியா' என்று.

பலருக்குத் தெரியாத முழுப்பாரதி. அவர்களை இலே சில் விடவில்லை! 'மூடரே!' என்று அவர்களை விளிக்கிறார் கேட்கிறார் அவர்களை.

"முன் பிறந்தோர் காரணத்தாலே
மூடரே, பொய்யை மெய்யென லாமோ?
முன்பெனச் சொல்லும் கால மதற்கு
மூடரே, ஓர்வரை துறை யுண்டோ?
மூன்றுகோடி வருடமு முன்பே!
முன்பிறந்த தெண்ணிலாது புவிமேல்
மொத்த மக்களெலா முனிவோரோ?
நீர் பிறக்குமுன் பார்மிசை மூடர்
நேர்ந்ததில்லை என நினைத்தீரோ?
பார் பிறந்ததுதொட் டின்றுமட்டும்
பலபலப்பல பற்பல கோடி!
கார்பிறக்கு மழைத்துளி போலே
கண்ட மக்க ளனைவருள்ளேயும்
நீர் பிறப்பதன் முன்பு மடமை
நீச்சத்தன்மை இருந்தன வன்றோ?"

பழமை விரும்பி, என்ன எண்ணுவான் பாரதியா ரைப் பற்றி?

"சென்றதினி மீளாது மூடரே நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்; சென்றதனைக் குறித்தல் வேண்டா,
இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று நெஞ்சில்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக்கொண்டு
தின்றுவிளை யாடி இன்புற் றிருந்து வாழ்வீர்
தீமையெல்லாம் அகன்றுபோம் திரும்பி வாரா."

மற்றுமோர் சாட்டை, வெந்ததைத் தின்று வாயில் வந்ததைப் பேசுபவர்களுக்கு வகையாகத் தருகிருர் பாரதி! "சென்றது இனி மீளாது," மூடரே! மனுதர்மம் இருந்ததே! அரசுகளிலே ஆதிக்கம் இருந்ததே! நமது வலக் கரத்திலே அக்கினி இருந்ததே! நம்மைக் கண்டதும், மற்றவர்களுக்கெல்லாம் பயபக்கி இருந்ததே! இவை எல்லாம் இன்று இல்லேயே! மீண்டும் கிடைக்கப் பெறுவோமா என்றெல்லாம். எண்ணி எண்ணி ஏங்காதீர்! "சென்றது இனி மீளாது !" என்று திட்டமாகக் கூறுகிருர் "கூறுகிறேன் கேளுங்கள் மூடர்களே!" என்று இடித்துரைத்துப் பேசுகிருர். இந்தப் பாரதி, மேடையிலே தோன்ருத பாரதி!

" செத்தபிறகு சிவலோகம் வைகுண்டம்
சேர்ந்திடலாமென்றே எண்ணியிருப்பர்
[பித்தமனிதர்"

* * *

"சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்"

* * *

"அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடு வீரே
பெரும்புகழ் உமக்கே இசைக்கின்றேன் நான்
பிரமதேவன் கலேயிங்கு நீரே"

ஃ ஃ ஃ

"பெண்ணுக்கு விடுதலேநீர் இல்லே என்ருல்,
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லே!"

தேசியக் கவிஞரால் மறைக்கப்பட்டுள்ள புரட்சிக் கவிஞர் தெரிகிறார், இன்னும் தெளிவாக!

" நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்"

என்று சோகிக்கிறார் பாரதி! ஏன் நிலை கெட்டுவிட்டது? தேசியக் கவியாகமட்டும் இருப்பின், பரங்கிபிடித்தாட்டப் பாரதநாடு பரதவித்தது என்று மட்டுமே கூறுவார். ஆனால், பலருக்குத் தெரியவிடாதபடி மறைக்கப்பட்டிருக்கும் முழுப்பாரதி பேசுவதைக் கேளுங்கள்.

" அஞ்சி அஞ்சி சாவார் - இவர்
அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே!
வஞ்சனை பேய்க ளென்பார் - இந்த
மரத்திலென்பார் அந்த குளத்திலென்பார்!
துஞ்சுது முகட்டிலென்பார்! . மிகத்
துயர்ப்படுவார்' எண்ணிப் பயப்படுவார்!
மந்திரவாதி யென்பார் - சொன்ன
மாத்திரத்திலே மனக் கிலிபிடிப்பார்!
யந்திர சூனியங்கள் - இன்னும்
எத்தனை யாயிரம் இவர் துயர்கள்!"

ஃ ஃ ஃ

சாடுகிறார், சாடுகிறார், மூட நம்பிக்கைகளை;

" கொஞ்சமோ பிரிவினைகள்? - ஒரு
கோடியென்றால் அது பெரிதாமோ?
ஐந்துதலைப் பாம்பென்பான் - அப்பன்;
ஆறுதலை யென்று மகன் சொல்லிவிட்டால்,
நெஞ்சு பிரிந்திடுவார் - பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்!"

இங்ஙனம், சமுதாயத்திலே உள்ள கேடுகளை - மன திலேயுள்ள தளைகளை—மூடக் கொள்கைகளைத் தாக்குகிறார், தமது கவிதா சக்தியைக் கொண்டு!

'பாரதியாரா?' என்று ஆச்சரியத்துடன் நாடு கேட்கும், அவர் சொன்ன அத்தனையும் சொல்லப்போனால் ஆனால், அந்தப் பாரதியாரை அரும்பாடுபட்டு மறைத்திருக்கிறார்கள் ;

"பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே!"

என்ற ஒரு வரியைக்கூட அவர் சொன்னதாகச் சொல்ல அஞ்சி மறைந்தனர். அருந்தமிழ் நாட்டவர் தான்! பாரதியார் அந்தச் சமுதாயத்தை மேலும் என்னென்ன கூறினார் என்று தெரிந்தால்தானே, பாரதியாரின் முழு உருவம் தெரியும்?

"இந்நாளிலே பொய்மைப் பார்ப்பார் - அவர்
ஏது செய்தும் காசு பெறப்பார்ப்பார்!
பிள்ளைக்குப் பூணூலா மென்பான்! - நம்மைப்
பிச்சுப் பணம் கொடெனத் தின்பான்!
பேராசைக் காரனடா பார்ப்பான்! - ஆனால்
பெரியதுரை என்னில் உடல் வேர்ப்பான்!
யாரானாலும் கொடுமை செய்வான்! - பணம்
அள்ளி இடவில்லை யெனில் வைவான்!"

மகாகவி பாரதியின் வாக்கு, "பேராசைக் காரனடா பார்ப்பான்!" என்பது. மேடைகளிலே கேட்டதுண்டா? பாரதி சிறப்பு விழாக் கூட்டங்களிலே, இந்தப் பாரதி தெரிந்தாரா? இல்லை! அவர் மறைந்திருக்கிறார், மண்டபம் பந்தலால் மறைக்கப்பட்டிருப்பதுபோல! விழா முடிந்தது! பந்தலும் பிரிக்கப்பட்டது; மண்டபம் தெரிகிறது என்பது

போல, வெள்ளையர் வெளியேறும் விழா முடிந்தது! இனி தேசீயக் கவிதை அலங்காரத்தைக் கடந்து நிற்கும், பாரதி காண விரும்பிய புது சமுதாயம்.

" ஏழை யென்றும் அடிமையென்றும்
எவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்போர்
இந்தியாவில் இல்லையே !"

என்ற இலட்சியம் ஈடேறிய நிலைபெற்ற சமுதாயம், மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கமில்லாத சமுதாயம், பழமை மோகத்தில் படியாத சமுதாயம், காசியில் பேசுவதை காஞ்சியிலுள்ளோர் கேட்பதற்கான கருவி செய்யும் சமுதாயம், அத்தகைய புதிய சமுதாயத்தைக் காண விரும்பிய பாரதி நிற்கிறார். ஆனால் அவரைப் பந்தல் மறைத்துக் கொண்டிருக்கிறது! அவரை நாட்டுக்குத் தெரிய விடாதபடி செய்வதில் பலருக்கு இலாபம் இருக்கிறது. எனவே, தேசீயக் கவிமட்டுமே தெரியவேண்டும் என்று எண்ணி ஏற்பாடுகள் செய்வார்! ஆனால், அந்த எண்ணமும் ஈடேறுவதில்லை. மக்களுக்குத் தெரிய ஒட்டாது அவர்கள் மறைத்துவைத்துள்ள பாரதியார். உண்மையில் மறைந்துவிடவில்லை. அதோ பாடுகிறார் கேளுங்கள்.

" இருட்டறையில் உள்ளதடா உலகம் ஜாதி
இருக்கின்ற தென்பானும்......"

இது பாரதிதாசன் குரல் அல்லவா? என்பீர்கள். ஆம்! பாரதிதாசன்தான்! அவர்தாம், மணிமண்டபத்தை விட விளக்கமாக முழுப் பாரதியைத் தமிழகத்துக்குத் தரும் அரும்பணியாற்றுகிறார். அவரிடம் நாங்கள் முழு

பாரதியாரைக் காண்கிறோம்; களிக்கிறோம்; வாழ்த்துகிறோம்.

" அச்சம் தவிர்
ஆண்மை தவறேல்
உடலினை உறுதிசெய்
எண்ணுவ துயர்வு
ஏறுபோல் நட
ஒற்றுமை வலிமையாம்
ஔடதங் குறை
கற்ற தொழுகு
கால மழியேல்
குன்றென நிமிர்ந்து நில்
கூடித் தொழில் செய்
கைத்தொழில் போற்று
கொடுமையை எதிர்த்து நில்
சரித்திரந் தேர்ச்சிகொள்
சாவதற் கஞ்சேல்
சூரரைப் போற்று
சோதிடம் தனையிகழ்
தெய்வம் நீ என்றுணர்
தையலை உயர்வுசெய்
தொன்மைக் கஞ்சேல்
நினைப்பது முடியும்
நூலினைப் பகுத்துணர்
நெற்றி சுருக்கிடேல்
பிணத்தினைப் போற்றேல்
புதியன விரும்பு
பேய்களுக் கஞ்சேல்
போர்த்தொழில் பழகு
முனையிலே முகத்துநில்
மேழி போற்று
யாரையும் மதித்துவாழ் "

இவை பாரதியாரின் புதிய ஆத்திச்சூடி! புதிய பாதை பாரதி பாதை! தேசீய மணி மண்டபத்தோடு முடிந்து விடுவதல்ல. அதற்கும் அப்பாலுள்ள சமதர்மபுரிக்குப் போவதற்கு அமைந்த பாதை ; அந்தப் பாரதி பாதையை அமைத்துக் கொண்டிருக்கும் - அரும்பணி யாற்றும் நாம் பாரதியார் பெற்ற சிறப்புக்கண்டு பெருமை யடைவதுடன் பாரதியாரின் முழு உருவமும் மக்களுக்குத் தெரியச் செய்யும் காரியத்தையும் மேற்கொண்டுள்ளோம். பாரதி காட்டிய பாதையை, நாடு நன்கு அறியவேண்டும்! பரங்கியை ஓட்டிவிடுவது மட்டுமல்ல அது. நாட்டின் கேட்டுக்குக் காரணமாக உள்ள அனைத்தையும் ஓட்டிப் புதிய சமூக அமைப்பாக்கும் பாதை! அந்தப் பாரதி பாதையை நாம் போற்றுகிறோம்!

முற்றும்

# எமது வெளியீடுகள்

## தமிழக முதலமைச்சர்
## அறிஞர் அண்ணுவின் நூல்கள்

| | | |
|---|---|---|
| அன்பு வாழ்க்கை | 1 | 50 |
| கதம்பம் | 1 | 50 |
| முக்கனி | 1 | 50 |
| சமதர்மம் | 1 | 50 |
| புன்னகை | 1 | 50 |
| பொன்மொழிகள் | 1 | 50 |
| அண்ணுவின் அறிவுரைகள் | 1 | 50 |
| அண்ணுவின் திருக்குரல் | 1 | 50 |
| அண்ணுவின் அரசியல் வாழ்க்கை | 2 | 00 |
| மணமக்களுக்கு அண்ணுவின் ஆலோசனை | 1 | 50 |

கிடைக்குமிடம் :

அன்பு நிலையம்

131, பிராட்வே : : சென்னை-1.

அன்பு நிலையம்

131, பிராட்வே சென்னை-1